UNIVERSITY OF JAFFNA
LIBRARY
07 JUN 2013

# எழுகதிர்

ஐரோப்பிய பதிப்பு

ELUKATHIR

Rs20 | Euro0.50

வாரஇதழ் | இதழ்: 41 | 14.05.2013

## வடக்கு தேர்தலையொட்டி சட்டத்தில் திருத்தம்!

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் வடமாகாணசபைத் தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், 1983ஆம் ஆண்டு மே முதலாம் திகதிக்கும் 2009 மே 18ஆம் திகதிக்கும் இடையில் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கும் சட்டத்தைக் கொண்டுவர அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வேறு எந்த இடத்திலும் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படாதவர்களுக்கே இந்த வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இதற்கான அமைச்சரவை பத்திரத்தை நீதி அமைச்சர் சமர்ப்பித்துள்ளார். இடம் பெயர்ந்து வேறு மாவட்டங்களில் வாழ்வோர் சொந்த மாவட்டங்களில் வாக்காளராக பதிவு செய்வதற்கு தற்போது சட்டத்தில் இடமில்லை.

(11ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களுக்கான தீர்வு? திட்டம் தயாரிக்க மூவர் குழு!

## சுமந்திரன், கஜேந்திரகுமார், குருபரன் நியமனம்!

தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் என்ன? என்பது தொடர்பிலான திட்டவரைபினை உருவாக்குவதற்கான குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அமைப்பின் இணைப்பாளர் குருபரன் ஆகியோர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது.

சிவில் சமூகப் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராஜப்பு யோசப் ஆண்டகை தலைமையில் கடந்த சனி பிற்பகல் மன்னாரில் தமிழ் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

குறித்த சந்திப்பின் போது தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம், 'தமிழ்த் தேசிய பொதுச் சபை' ஒன்றை உருவாக்குதல் உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் என்ன? என்பது தொடர்பிலான திட்டவரைபினை



உருவாக்குவதற்கான குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய ப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அமைப்பின் இணைப்பாளர் குருபரன் ஆகியோர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது.

குறித்த குழுவினால் சமர்ப்பிக்கப்படும், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான ஆலோசனை வரைபுகள் எதிர்வரும் ஜூன் மாதம் 8ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள அடுத்த கூட்டத்தின்

(11ம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு பதிவு விவகாரம்: மன்னார் கூட்டத்தில் முடிவில்லை!

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்வதில் மன்னாரில் நடைபெற்ற முக்கிய கூட்டத்தில் முடிவெதுவும் எட்டப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இணைந்துள்ள ஐந்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் இடையே, மன்னார் ஆயர் தலைமையில் நடைபெற்ற முக்கிய கூட்டம் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் ஆர்.சம்பந்தன், மற்றும் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் விளக்கமளித்தனர்.

இதேபோன்று, ஈ.பி.ஆர்.எல்.எவ், டெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறினர்.

இருப்பினும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பை பதிவு செய்வதில் எந்தவிதமான முடிவுகளும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை என சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறினார்.

இதேவேளை, பதிவு செய்வது தொடர்பிலும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகள் ஒரு புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படுவதற்குத் தமிழரசுக் கட்சியினர் சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்வதற்கு முன்வந்துள்ளதாக, அந்தக் கட்சிக்கும் டெலோ அமைப்புக்கும் இடையில் கடந்த வாரம் வெள்ளியன்று நடைபெற்ற கூட்டத்தின் முடிவுகள் குறித்து தெரிவித்த டெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூறினார்.

(11ம் பக்கம் பார்க்க)



## இலங்கை மாநாட்டுக்கு----
## மகாராணிக்கு பதிலாக இளவரசர் வருகிறார்!

இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் பிரித்தானிய மாகாராணி சார்பில், இளவரசர் சார்ள்ஸ் கலந்துகொள்வார் என பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா அறிவித்துள்ளார்.

நீண்டதூரம் பயணம் செய்வதைத் தவிர்க்கும் நோக்கில் பிரித்தானிய மகாராணி எடுத்திருக்கும் இத்தீர்மானத்துக்கு மதிப்பளித்து, இலங்கையில் நடைபெறவிருக்கும் பொது நலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக்கு இளவரசர் சார்ள்சை வரவேற்பதாக கமலேஷ் சர்மா விடுத்திருக்கும் உத்தியோகபூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரித்தானிய மகாராணியின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வுகளில் மகாராணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரச குடும்பத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தமையையும் கமலேஷ் சர்மா தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

(11ம் பக்கம் பார்க்க)



நட்புறவுடன் நாட்டைக் கட்டியெழுப்புவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பாதையில்

## இறைவரிபகுதி நவீன மயப்படுத்தல்

யாழ். மாநகர சபையின் நாணாவித இறைவரி பகுதி நவீன



மயப்படுத்தப்பட்டுள்ளது.
யாழ். மாநகர சபை வளாகத்தில் அமைந்துள்ள நவீனமயப்படுத்தப்பட்ட நாணாவித இறைவரி காரியாலயத்தை மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் உட்பட ஆணையாளர் செ.பிரணவநாதன் மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் என பலர் சென்று பார்வையிட்டுள்ளனர்.
அத்துடன், யாழ். மாநகர சபையின் முக்கிய துறைகள் தற்போது கணணி மயப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காங்கேசன்துறைமுகம் புனரமைப்பு

காங்கேசன்துறை துறைமுகம் புனரமைப்பு செயற்பாடு பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது.



இலங்கை துறைமுக அதிகாரசபை முகாமைத்துவப் பணிப்பாளர் நிஹால் ஹெப்பிட்டிப்பொல, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தாவிடம் நிறைவேற்றப்பட்ட செயற்திட்ட அறிக்கையினைச் சம்பிரதாயபூர்வமாக கையளித்து வைத்தார்.
காங்கேசன்துறை துறைமுகத்தில் இந்நிகழ்வு கடந்த வாரம் இலங்கைக்கான இந்திய துணைத்தூதுவர் வே.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் காங்கேசன்துறை துறைமுக புனரமைப்புச் செயற்பாடுகள் 25 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நடைபெற்று தற்போது முடிவடைந்துள்ளது.
மேலதிக துறைமுக வேலைகளைத் திட்டங்களைச் செய்வதற்காக இந்திய அரசாங்கம் 45 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலகு கடனடிப்படையில் வழங்கவுள்ளதாக இலங்கைக்கான இந்தியத்தூதுவர் அசோக் கே காந்தா கூறினார்.
இந்நிகழ்வில் வடமாகாண பிரதி பிராந்திய தளபதி சந்தன விமலதுங்க, கேணல் உபுல் அபயரத்தன, தளபதி புத்திக லியகமஹே உட்பட கடற்படை அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

## மாதிரித்தோட்டம்

யாழ். சாவகச்சேரி பிரதேச பிரிவில் உள்ள வரணிப் பகுதியில் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட



அமைச்சின் மாதிரித் தோட்டம் மற்றும் நாற்று மேடை ஆகியன கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.
50 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த மாதிரித்தோட்டம் மற்றும் நாற்று மேடையினை தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அமைச்சர் ஏ.பி.ஜெகத் புஸ்பகுமார கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தனர்.
இங்கு அமைக்கப்பட்டுள்ள நாற்று மேடை ஒரே தடவையில் 100 கன்றுகள் பதிவைக்க கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.

## குளங்கள் புனரமைப்பு

வவுனியா மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிப்பிற்குள்ளான ஓமந்தை மற்றும் நெடுங்கேணி பிரதேசங்களிலுள்ள குளங்களை புனரமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெறுவதாக வவுனியா மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் கு.சுலோஜினி



தெரிவித்தார்.
'வளம் மிக்க நாளைய தினத்திற்கு ஒளிமயமான அடித்தளம்' என்னும் தொனிப்பொருளில் ஓமந்தை கமநல சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த வாரம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,
'வவுனியா மாவட்டத்தில் 150 குளங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எமது திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் முதல் கட்டமாக எமது திணைக்களம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து 50 குளங்களை இந்த வருட இறுதிக்குள் புனரமைத்து முடிப்பதற்கான வேலைகளை துரிதகதியில் மேற்கொண்டுள்ளது.
இதேவேளை, கெயார் நிறுவனத்தின்; உதவியுடன்; 3 ஆண்டு திட்டத்தின் அடிப்படையில் 20 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. இவ்வாறு விவசாயத்திற்காக நாம் பல வேலைகளை முன்னெடுத்து வருகின்றோம். எமது திணைக்களம் சேதமடைந்த குளங்களை முன்னுரிமைப்படுத்தி திருத்தம் செய்வதற்கு எப்போதும் தயாராகவே உள்ளது மேலும் ஏ - 9 வீதியில் நாம் பயணிக்கின்றபோது, எமது மக்களுடைய ஏராளமான நிலங்கள் பராமரிப்பு இன்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இந்த நிலங்கள் நீண்டகாலமாக பயன்படுத்தப்படாமல்; உள்ளமையால் எமது விவசாயிகள் அதனை பயன்படுத்த முன்வர வேண்டும்' என்றார்.

## கணனிக்கூடதிறப்புவிழா

புலம்பெயர்ந்து வாழும் வயாவிளான் மகாவித்தியாலய பழைய மாணவன் சின்னத்துரை இராஜதுரையின்



நிதியுதவியில் (ரூபா. 15 மில்லியன்) அக்கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட கணினிக்கூட திறப்பு விழா கடந்த வாரம் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெர்டோ அமைப்பின் செயலாளர் குமரன் பத்மநாதன் (கேபி) பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்

## சிறுவர் பூங்கா

கிளிநொச்சி நகரில் புதிய சந்தைத் தொகுதிக்கு முன்பாக அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் 120 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பூங்கா கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தப்



பூங்காவினை இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் மிசேல் ஜே.சிசன் திறந்து வைத்தார்.
அத்துடன் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்கள் விளையாடி மகிழ்வதற்கான பொருட்களும் வழங்கப்பட்டன.
இந்தச் சிறுவர் பூங்கா ஏ9 வீதியின் மேற்கில் டிப்போச் சந்திக்கும் பிரதான பஸ் நிலையத்துக்கும் இடையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
Elukathir Weekly
Kandy Road, Karaddypokku, Kilinochchi
elukathirnews@gmail.com
முகநூல்: Elukathirthagaval

## நமது நோக்கு

# பிள்ளையார் சுழிபோட்ட மன்னார் சந்திப்பு!

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் தமக்கிடையேயான முரண்பாடுகளைக் களைந்து தமிழ் மக்களின் நலனுக்காக ஓரணியில் திரள்வதற்கான ஒரு கால்கோள் நிகழ்வாக கடந்த வாரம் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பு ஆண்டகை தலைமையில் கூடியிருந்தனர்.

இந்நிகழ்வில் என்ன நிகழப்போகின்றது என்பதற்காக தமிழ்மக்கள் ஆர்வமுடனும் அவதானிப்புடனும் காத்திருந்தனர்.

அண்மைக்காலமாக ஊடகங்களில் வெளிவரும் கூட்டமைப்பை உடைப்பதற்கு சதி........ ? கூட்டமைப்பை பதிவில் உள்ள சிக்கல்.........? கூட்டமைப்பினரால் நடத்தப்பட்ட இருவேறு மே தினநிகழ்வுகள்.. ? இவ்வாறாக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பு பல்வேறுபட்ட சர்ச்சைகளுக்குள் சிக்கியுள்ளது.

மன்னாரில் சிவில் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் இவற்றுக் கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளியையோ தீர்வையோ எட்டுவதற்கு உதவலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம், 'தமிழ்த் தேசிய பொதுச் சபை' ஒன்றை உருவாக்குதல் உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டிருப்பதாக அறியக்கிடைத்துள்ளது. இதன் விளைவாக தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் என்ன? என்பது தொடர்பிலான திட்டவரைபினை உருவாக்குவதற்கான குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தத் திட்டக் குழுவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அமைப்பின் இணைப்பாளர் குருபரன் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவினால் சமர்ப்பிக்கப்படும், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான ஆலோசனை வரைபுகள் எதிர்வரும் ஜூன் மாதம் 8ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள அடுத்த கூட்டத்தின் போது விரிவான விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் இதேவேளை ஜூன் மாதம் நடைபெறும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் தீர்வுத் திட்டம் தொடர்பிலான ஆலோசனை வரைபு தொடர்பிலான இணக்கத்தின் அடிப்படையிலேயே தொடர்ந்தும் இணைந்து செயற்படுவதா அல்லது தனித்துச் செயற்படுவதா என்பது தொடர்பில் முடிவு செய்யப்படும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இதேவேளை, 'தேசிய பொதுச் சபை' ஒன்றை அமைப்பது தொடர்பில் பலருடன் ஆலோசனை நடத்த வேண்டியுள்ளதாகவும் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் மறுப்புத் தெரிவித்தாகவும் கூறப்படுகின்றது.

இந்த தேசிய பொதுச்சபையிலாவது தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்திய அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பங்கேற்பது எதிர்காலத்தில் தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பாக ஒரு காத்திரமான பங்களிப்பை செய்யக் கூடியதாக இருக்கும் என கருதப்படுகின்றது. ஆனால் இந்த பொதுச்சபையில் இணைவதற்கான திட்டங்களை ஒருங்கிணைக்கும் பணியில் இணைக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியபட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அமைப்பின் இணைப்பாளர் குருபரன் ஆகியோர் தொடர்ந்து அதற்கான பணிகளை முன்னெடுக்கவேண்டும். எதிர்வரும் யூன் எட்டாம் திகதி சமர்ப்பிக்க இருக்கும் தீர்வுத்திட்டம் தொடர்பான திட்டவரைபுகளை ஓரணியில் நின்று ஏற்றுக்கொள்வார்களா? அல்லது வழமை போன்று பிரிந்து நின்றே நிராகரிப்பார்களா என்ற வினா இப்போதே தோன்றியுள்ளது.

எது எப்படியிருந்த போதிலும் இதுவரை பிளவுபட்டுப் போயிருந்த தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இந்தத் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்ட வரைபை உருவாக்குவதற்கு திட்டக்குழுவை அமைத்திருப்பது நல்லது ஒரு முன்னோக்காகவே கருதப்படுகின்றது.

# கூட்டமைப்பை உடைக்க சிலர் கனவு காண்கின்றனர்!

## -சிவிகே சிவஞானம்



தமிழ் தேசிய கூட்டமைப்பினை உடைப்பதற்கு சிலர் கனவு காண்கின்றார்கள். ஆனால், கூட்டமைப்பை எவராலும் உடைக்கமுடியாதென்று தமிழரசு கட்சியின் துணைச் செயலாளர் சீ.வி.கே சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. அந்த சந்திப்பின் போது தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் எழுந்துள்ள முரண்பாடுகள் தொடர்பில் ஊடகவியலாளர்களினால் எழுப்பபட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பதிலளிக்கையில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களிடம் ஒற்றுமையை சிதை சிலர் முயற்சிக்கின்றனர். அவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம்.

அதேவேளை, தமிழர் விடுதலை இயக்கம் தமிழரசு கட்சியை விட்டு விலகாது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், நம்பிக்கைதான் வாழ்க்கை. அரசியலில் முரண்பாடுகள் இருக்கதான் செய்கின்றன. ஆனால், அவற்றினை ஏற்று நடக்க வேண்டுமென்றும் அவர் கூறினார். தமிழ் தேசிய கூட்டமைப்பினை பதிவு செய்வதென்பதில் சில உத்திகள் இருப்பதாகவும், கட்சியாக பதிவு செய்வதில் இரண்டு வகை இருப்பதாகவும், அதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனியாக பதிவு செய்வதா அல்லது கூட்டாக பதிவு செய்வதா என்பதுதான் முக்கியமானதென்றும் அவர் கூறினார்.

கூட்டமைப்பை உடைப்பதல்ல எல்லோரினதும் இலச்சியமாகும் என்பதனை நினைவுப்படுத்த விரும்புகின்றேன் என்றும் அவர் சொன்னார்.

கூட்டமைப்பு ஒருபோதும் உடையாது என்பதுடன் கூட்டமைப்புக்குள் தனிக் கட்சிக்கு இடமில்லை என்றும், கூட்டாக பதிய முடியுமென்றும் அவர் சுட்டிக் காட்டினார். அன்னியர்கள் எங்கோ இருக்க நாங்கள் ஏன் அடிபட வேண்டுமென்றும், தமிழ் தேசிய கூட்டமைப்பு உடையுமென்றும் சிலர் கனவு காண்கின்றார்கள் என்றும் அவர் கூறினார்.

# சிவிகே சிவஞானத்தின் வீட்டின்மீது நள்ளிரவில் தாக்குதல்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளராகிய சிவிகே.சிவஞானத்தின் மீது கடந்தவாரம் செவ்வாயன்று (7) நடத்தப்பட்ட கல்வீச்சுத் தாக்குதலில் அவர் சிறுகாயத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்.

இரவு 11.45 மணியளவில், அவர் தமது வீட்டில் கணணியில் வேலை செய்து கொண்டிருந்தபோது, அவர் இருந்த அறை ஜன்னல்கள் மீது சரமாரியாகக் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

வருகின்ற வடமாகாண சபைக்கான தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் தான் போட்டியிடவுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்ற இந்தச் சமயத்தில் தமது வீட்டின் மீது, குறிப்பாகத் தன்னை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்தக் கல்வீச்சுத் தாக்குதலை நிச்சயமாக அரசியல் நோக்கம் கொண்ட தாக்குதலாகவே தான் கருதுவதாக அவர் தெரிவித்தார்.

எனினும் இந்தத் தாக்குதலை யார் நடத்தியது என்று குறிப்பிட்டு தன்னால் சொல்ல முடியாதிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# புலனாய்வுத் தகவல்களை பரிமாற பாதுகாப்பு செயலர் யோசனை!



நாடுகளுக்கு இடையில் புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது என பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். புலனாய்வுத் தகவல்களை வினைத்திறனாக பயன்படுத்திக் கொள்ள நாடுகளுக்கு இடையில் அவை பகிரப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். நிதிப் புலனாய்வுப் பிரிவுகள், புலனாய்வு முகவர் நிறுவனங்கள், சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் தரப்பினர் ஆகிய தரப்பினருக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளை தடுப்பதற்கு புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய வலய மாநாடொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A People Without a Story

ENGLISH

By AATISH TASEER

FOUR years ago this week, the announced that their struggle for an independent homeland in northern Sri Lanka had "reached its bitter end." The group had been fighting on behalf of the Tamil people for more than a quarter-century, and its defeat was absolute.

Today, great sections of Tamil country are still a scene of devastation. The houses are either destroyed or brand-new; the land is uncultivated and overgrown; there are forests of decapitated Palmyra palms, damaged by heavy shelling. And then there are the relics of war — graveyards of L.T.T.E. vehicles rotting in the open air; the remains of a ship, its superstructure blown to pieces and in whose rusting starboard a gaping hole gives on to blue sea.

When I first arrived there last March, I saw the loss in primarily military terms. But the feeling of defeat among the Tamils of Sri Lanka goes far deeper than the material defeat of the rebels. It is a moral and psychological defeat.

In that forested country of red earth and lagoons, it is possible to visit the bunker of the leader of the Tigers, a torture chamber of a place that sinks three levels into the ground. There, in the fetid air, infused with the smell of urine and bat excrement, one senses the full futility and wretchedness of what the rebel movement became in the end.

For the truth is that the Tamil defeat has less to do with the vanquishing of the L.T.T.E. by the Sri Lankan Army and much more to do with the self-wounding ("suicidal" would not be too strong a word) character of the movement itself. The Tigers were for so long the custodians of the Tamil people's hope of self-realization. But theirs was a deeply flawed organization. Under the leadership of Velupillai Prabhakaran, the Tigers pioneered and perfected the use of the suicide bomber. This was not simply a mode of warfare, but almost a symbol, an expression of a self-annihilating spirit. And it was to self-annihilation that Mr. Prabhakaran committed the Tamils. He was a man who, like a modern-day Coriolanus, seemed to lack the imagination for peace. He



took the Tamils on a journey of war without end, where no offer of compromise was ever enough, and where all forms of moderation were seen as betrayal.

One evening, soon after I arrived in Jaffna, the capital of the northern province, I had dinner at the house of a woman whose sister had been part of a circle of academics who had published a book in 1990 called "The Broken Palmyra." The book was, by no means, a simple polemic against the Tigers; it was an academic work that, in trying to be even-handed, had taken account of both government and L.T.T.E. atrocities. But this was too treasonous for Mr. Prabhakaran, and my host's sister was killed even before the book went to print.

The room that night was filled with people whose lives the tyranny of the L.T.T.E. had left forever scarred. There was the Muslim woman who, along with all the other Muslim families of Jaffna, had, one morning in 1990, been summoned to a school compound and given two hours to leave the city of her birth. They were told to leave behind their valuables and the deeds to their houses. When they asked why they were being expelled, they were told that they were lucky not to be killed. Then they were loaded into lorries and escorted to the border of the district. (Like most, this woman returned only after the end of the war in 2009.)

A middle-aged woman, working as a maid in the house, had more recent traumas. Her son had gone to work with his uncle, a carpenter, in the northern district of Kilinochchi, which would become the scene of an infamous battle. When war came, it was Mr. Prabhakaran's express strategy to retreat with an enormous civilian population — 300,000 people, some say — and to use them as a human shield against the advancing army. It was his intention to let so many Tamils die that the international community (read, the West) would be forced to intervene, and the Tamils would be granted their homeland.

But here he made a grave mistake: he either overestimated his own importance; or else, the West's sense of decency. For the West, occupied with problems more pressing, let as many Tamils die as had to die for the war to be won. This was an added layer of shame in the Tamil defeat. It was not just that they had lost the war. It was also that the grass-roots movement they originated, and for which they had paid taxes and sacrificed able-bodied men and women, had, in the end, been more vicious to them than to anyone else.

When I asked what became of the woman's son, she replied that he had not come home. "He's dead," my hostess clarified, "but she doesn't like to hear that."

THE north of Sri Lanka today is a spectacle of Sinhalese triumphalism. A victorious army is rebuilding new roads, grabbing land for itself (6,000 acres, rumor has it), and displaying the spoils of war before tourists from the south. Even when the government of President Mahinda Rajapaksa acts magnanimously toward the Tamil people, by building new infrastructure projects, for instance, the Tamils seem to feel that their defeat is being rubbed in their faces. And they are not wrong. It is simply one of those intractable situations where nothing will feel right. For the loss the Tamils feel is really the loss of a story. They are now a people without a story, a traumatized people, devastated by decades of war and migration, whose dream of self-determination was hijacked by the nihilistic vision of their leader and turned to nightmare.

"We lost something," a Tamil artist in Jaffna, T. Shanaathanan, told me, "but we do not know what. The war is over, but there is a kind of psychological warfare now. Before, people looked at us with suspicion, with the feeling that you're Tamil, you might be a terrorist. But now they look at us as if we're nothing."

(courtesy : http://www.nytimes.com)

DUTCH

## Charles vervangt misschien de Koningin op de CHOGM

De Koningin zal voor het eerst sinds 1973 de jaarlijkse algemene vergadering van de staatshoofden van het Commonwealth missen, zo is Sky News te weten gekomen. Volgens bronnen wordt Prins Charles als lid van het Koninklijk Huis aangekondigd de vergadering, die later dit jaar in Sri Lanka plaatsvindt, bij te wonen namens haar. Het is onduidelijk waarom de Koningin, die aan het hoofd staat van het Commonwealth, ervoor heeft gekozen weg te blijven, maar velen zullen de beslissing plaatsen als onderdeel van de overdracht van verantwoordelijkheden op haar erfopvolger. De Britse vorst was eerder dit jaar in het ziekenhuis opgenomen omdat ze gebukt ging onder de symptomen van gastroenterites, maar het is niet bekend of de beslissing stoelt op gezondsredenen.

Tenzij de CHOGM conferentie wordt gepland in Groot-Brittanië in 2015 zullen velen zich ook afvragen of het nog waarschijnlijk is dat de Koningin, die dan 89 is, nog wel een dergelijke bijeenkomst tijdens haar leven zal bijwonen. De staatshoofden van de 54 Commonwealth landen komen om de twee jaar bijeen om het eens te worden en te discussiëren over de zaken die in de wereld spelen. De Koningin woonde het laatst een Commonwealth conferentie bij in Perth Australië, in 2011. Vorig jaar waren er jongere leden van de koninklijke familie die de Koningin overzees vertegenwoordigden, als onderdeel van haar diamanten jubileum. Buckingham Palace zal waar-schijnlijk suggereren dat de aanwezigheid van Prins Charles in Sri Lanka simpelweg in het verlengde ligt van het belangrijker worden van de rol van de familie meer in de breedte. Maar sommigen zullen waarschijnlijk voorspellen dat deze ontwikkeling de weg vrijmaakt voor de Prins van Wales om het volgende hoofd van de Commnwealth te worden, ondanks het feit dat die rol en functie niet automatisch naar de oudste zoon gaat.

Het volgt ook op commentaar van de Australische premier Julia Gillard, die Charles steunde om de rol in de Commonwealth over te nemen, ondanks het feit dat Gillard de voorkeur geeft aan een republiek zodra de Koningin de troon niet meer bezet. "Voor wat Australië betreft, ik ben er zeker van dat de opvolger van de Koningin op een dag als Hoofd van het Commonwealth zal dienen met dezelfde waardigheid als Hare Majesteit dat gedaan heeft", zo sprak mw Gillard in maart.

In een televisie boodschap opgenomen in Kaapstad op haar 21e verjaardag zei de toen Prinses Elizabeth tegen de leden van het Commonwealth : "Ik verklaar voor u allen dat ik mijn hele korte of lange leven toegewijd zal blijven om de grote rijksfamilie die wij allen zijn ten dienste te staan ." De afwezigheid van de Koningin tijdens de november bijeenkomst wordt echter niet in gedachten verbonden aan de gevoeligheden rond de staat van dienst van Sri Lanka op mensenrechtengebied, die ertoe leidde dat de Canada's Premier Stephen Harper besloot de CHOGM te boycotten

## No decision to repeal certain sections of 13th Amendment – Basil

National Organizer of the SLFP, Minister Basil Rajapaksa said yesterday that the government has still not reached finality on the longstanding proposition to repeal certain sections of the 13th Amendment to the Constitution considered obstacles to government's development initiative.

He said the effort envisaged the scrapping of land and police powers, an issue which has gathered momentum with the impending Northern PC polls.

Rajapaksa was of the opinion that whatever the UPFA government's final decision on the matter was, it would be the moral obligation and responsibility of all constituent political parties to abide by the President's decision to conduct the Northern PC polls in September this year.

Meanwhile, Leader of the National Freedom Front (NFF), Minister Wimal Weerawansa had stated that this party will start campaigning countrywide from tomorrow (13) to create awareness amongst the masses on the importance of conducting the Northern PC poll sans the controversial police and land powers.

When asked to comment on his party's position on this crucial issue, Weerawansa refused to discuss it and promptly disconnected the line.

The Jathika Hela Urumaya (JHU) another constituent Party in the UPFA government led by Minister Patali Champika Ranawaka had also taken up the position that the party is opposed to holding the Northern PC polls and would campaign against it.

Basil Rajapaksa said that President Mahinda Rajapaksa would make the announcement calling for the holding of PC polls to the Northern, North Western and the Central Provinces at an auspicious time so that the elections could be held in September. The UPFA would not name its chief ministerial candidate as usual and its list of candidates would be multifaceted.

The UPFA list would include candidates of its constitutional parties such as the EPDP led by Minister Douglas Devananda in the Jaffna district, All Ceylon Muslim Congress (ACMC) headed by Minister Rishard Bathuideen in the Wanni district and the candidates of the Left parties in the coalition, the Minister told The Sunday Island.He said candidates of the Sri Lanka Freedom Party (SLFP) the main constituent party of the UPFA and independent Tamil candidates including academics, lawyers, doctors and intellectuals who had no affiliations whatsoever with any militant group or political party will also be included in the list..

Newspaper advertisements calling for applications from such individuals have been inserted to appear in many Tamil newspapers on Sunday (12) while discussions with prospective individual candidates are also continuing, he noted.

"The government has expectations that those elected should be good people who are dedicated to be of service to the Tamil community after the conclusion of the elections in the North", he explained.

(Courtesy : http://www.island.lk)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - ஆழமான அரசியல் பிரச்சனைக்கு அதீத முழக்கங்கள் மட்டும் தீர்வாகாது....!

இலங்கை தமிழர்கள் பிரச்சனையில் திடீர் அக்கறை காட்டுபவர்களும், அக்கறையே காட்டாமல் ஒதுங்கி நிற்பவர்களும், உலகில் எந்த மூலையில் எது நடந்தாலும் நமக்கென்னன்னு தானுண்டு தன் குடும்பமுண்டு என்றிருப்பவர்களும் கண்டிப்பாக இந்த பேட்டியை படிக்கவேண்டும்.

இலங்கை தமிழர் பிரச்சனை 60 ஆண்டுகளாக தொடர்கிறது. அங்கு ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கத்தாலும் பிரச்னைக்கு தீர்வுகாண முடியவில்லை. 30 ஆண்டுகளாக நடைபெற்ற உள்நாட்டுப் போரிலும் பல ஆயிரம் பேர் மடிந்துள்ளனர். இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வுரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அக்கறை எல்லா தரப்பிலும் உள்ளது. இந்த ஆழமான அரசியல் பிரச்சனைக்கு ''அதீத முழக்கங்கள்'' மட்டும் தீர்வாகாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தோழர். ஜி. ராமகிருஷ்ணன் கூறியுள்ளார்.

''செம்மலர்'' - மே மாத இதழுக்கு அவர் அளித்த விரிவான பேட்டியின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி: தனி ஈழம் தீர்வாகாது என்று 80-களில் மார்க்சிஸ்ட் கட்சி கூறியது சரியாக இருக்கலாம். ஆனால் இன்றும் அதையே கூறுவது சரியல்ல என்று ஒரு வார இதழில் கேள்வி-பதில் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்கள். ஒன்றுபட்ட இலங்கைக்குள் நல்லது ஒன்றுமே நடக்காத போது தனி ஈழம் தான் தீர்வு என்று கோருவது எப்படித் தவறாகும்? எல்லோரும் ஒரு வழியில் போனால் மார்க்சிஸ்ட் கட்சி மட்டும் இப் பிரச்சனையில் ஏன் தனி வழியில் போகிறது? என்றெல்லாம் விமர்சனங்கள் வருகின்றன அல்லவா?**

ஜி.ஆர்: எங்கள் மீது வைக்கப்படும் விமர்சனங்கள், அள்ளி வீசப்படும் அவதூறுகள் என எல்லாவற்றையும் நாங்கள் அறிந்து தான் இருக்கிறோம். விமர் சனங்களைப் பரிசீலிப்பதும் அவதூறு களைப் புறந்தள்ளுவதும் தான் சரியான அணுகுமுறை. தனி வழியில் போகும் ஆசையில் எழுந்ததல்ல மார்க்சிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு. விருப்பு வெறுப்புகளுக்கும் முன் முடிவுகளுக்கும் அப்பாற்பட்டு புறநிலை யதார்த்தங்களின் அடிப்படையில் வரலாற்றுப் பின்னணியில் தான் மார்க்சிஸ்ட்டுகள் முடிவு எடுக்கிறார்கள். தவிர, உங்கள் கேள்வியில் குறிப்பிடுவது போல, தனி ஈழம் என்னும் கோரிக்கையின் பின்னால் எல்லோரும் இருப்பதாகச் சொல்வதும் சரியல்ல.. அதை விளக்கமாகப் பார்க்க வேண்டும். இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய அடிப்படையான நோக்கம். தனி நாடு கேட்டால் நல்லதை விடத் தீங்குதான் தமிழர்களுக்கு வந்து சேரும் என்பதுதான் தொடர்ந்து எமது புரிதலாகவும் நிலைப்பாடாகவும் இருக்கிறது. தமிழகத்தில் இருப்பவர்களை விடுங்கள். இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் எல்லோருமே தனி ஈழம் கேட்கவில்லை என்பதை இந்த நேரத்திலாவது - இவ்வளவு அழிவுக்குப் பிறகாவது - நிதானத்துடன் நாம் பார்க்க வேண்டும். நடைமுறையில் சாத்தியமில்லாத முழக்கம் அது. இலங்கை அரசின் மீது ஒரு அரசியல் நெருக்கடியும் அழுத்தமும் உருவாக்குவதற்கான உத்தியாகவே (PRESSURE TACTICS) தனி நாடு கோரிக்கையை ஆரம்பத்தில் முன் வைத்தார்கள். அதன் மூலம் தமிழ் மக்களுக்கான சம உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வைப் பெற முடியும் என்றுதான் அவர்கள் நம்பினார்கள்.

தமிழ் மக்கள் மூன்று பிரிவாக இலங்கையில் இருக்கிறார்கள். யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்குப் பகுதியிலும் கிழக்கு மாகாணத்திலும் வாழும் பூர்வீகத்தமிழர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் ஒரு பிரிவு. மலையகத்தமிழர் என்றழைக்கப்படும் தோட்டத் தொழிலாளிகளான இரண்டாவது பிரிவினர். தமிழ் முஸ்லிம்கள் மூன்றாம் பிரிவினர். மலையகத்தமிழர்களும் தமிழ் முஸ்லிம்களும் தனி ஈழம் கேட்கவில்லை. தென்னிலங்கையில் கொழும்பிலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் 2 லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களும் தனி நாடு கேட்கவில்லை. கொழும்பின் முன்னணி வியாபார வர்க்கத்தின் பகுதியாக தமிழர்கள் கணிசமாக அங்கே வாழ்கிறார்கள்.

1947-ல் பாகிஸ்தான் தனி நாடாக பிரிந்தபோது நிகழ்ந்ததைப்போல லட்சக் கணக்கான மக்களின் இடப்பெயர்வையும், துயரத்தையும் தனிநாடு கோரிக்கை தமிழர்களுக்குக் கொண்டுவரும். தமிழ் முஸ்லிம்கள் நீண்ட நெடுங்காலமாக சிங்களர் பெரும்பான்மையாக உள்ள கட்சிகள், அமைப்புகளோடுதான் நெருக்கமாக இருந்து வருகின்றனர். புலிகளோடு நீண்ட காலப் பகைச் சூழல்தான் அவர்களுக்கு இருந்துள்ளது. சமீபத்தில் சென்னையில் எங்களைச் சந்தித்த இலங்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஒருவர் கூறியதை இங்கே எடுத்துரைக்க வேண்டும். சமீபத்தில் நடந்து முடிந்த கிழக்கு மாகாணத் தேர்தலில் தமிழர்களுக்கு பெரும்பான்மை கிட்டவில்லை. தமிழ் முஸ்லிம்களிடம் நாம் கூட்டணி அமைக்கலாம். முதல்வர் பதவியை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு திட்டத்தை முன்வைத்தோம். ஆனால் அவர்கள் அதை ஏற்கவில்லை. சிங்களர்களுடன்தான் கூட்டு வைத்து அமைச்சரவை அமைத்துள்ளனர் என்று கூறினார். புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியிலிருந்து 48 மணி நேரத்தில் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் வெளியேற வேண்டும் என புலிகள் உத்தர விட்டு விரட்டியடித்த கொடுமை முஸ்லிம் மக்கள் மனங்களில் ஆறாவடுவாக இன்றும் உள்ளது.

இலங்கையின் ஆளும் அரசு தமிழர்களுக்கு தீமையைத் தவிர வேறு ஏதும் செய்யவில்லையே என்கிற வெறுப்பிலிருந்து அந்தக் கடைசிக்குச் சென்று தனி ஈழம்தான் தீர்வு என்று கோருவது நடைமுறையில் அவர்களுக்கு நன்மை பயக்காது. கால தாமதம் ஏற்பட்டாலும் சர்வதேச மற்றும் இந்திய அளவில் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியும் இலங்கையின் உள் நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகளின் முன்னெடுப்பிலும் ஓர் நிரந்தர அரசியல் தீர்வைக் காண வேண்டும். இன்றைய உடனடித் தேவைகளுக்கான முழக்கங்களை எழுப்புவதே சரியாக இருக்கும். தமிழர் வாழும் பகுதியிலிருந்து ராணுவத்தை விலக்குதல், தமிழ்ப்பகுதிகளைச் சிங்களமயமாக்கும் முயற்சிகளை நிறுத்துதல், போரினால் சொல்லவொண்ணாத் துயருக்கு ஆளாகியிருக்கும் தமிழ் மக்களுக்கு சமாதானமும் அவர்களின் மனக்காயங்களுக்கு ஆறுதலும் தரும் விதமான அணுகு முறையும் மீள் குடியமர்வுக்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

புலிகள் என்கிற சந்தேகத்தின் பேரில் பிடித்துச்செல்லப்பட்ட அல்லது காணாமல் போன பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகள் வீடு திரும்ப வேண்டும். ஓர் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தையைத் துவக்கி தமிழர்களுக்கு சம அந்தஸ்தும் சம உரிமையும் கூடிய மாநில சுயாட்சியுடன் காவல்துறை மற்றும் இதர நிர்வாக உரிமைகளுடன் கூடிய தமிழ் மாநிலம் அமைக்கப்பட வேண்டும். இது போல அம்மக்கள் என்ன தேவையில் இப்போது இருக்கிறார்களோ அதற்கான முழக்கங்களை எழுப்ப வேண்டும். அதுதான் அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

சின்னச்சின்ன இரண்டு நாடுகளாக (ஏற்கனவே அது சின்ன நாடுதான்) இலங்கை பிரிவது என்பது ஏகாதிபத்தியம் நுழைவதற்கான பாதையை அகலத் திறப்பதாகும். அது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மட்டுமல்ல. இந்தப் பிராந்தியத்துக்கே ஆபத்து.

**கேள்வி: இலங்கையை நட்பு நாடென்று மதிப்பதை மத்திய அரசு கைவிட வேண்டும் என்னும் கோரிக்கை பற்றி..**

ஜி.ஆர் : நட்பு நாடு இல்லை என்று முடிவு செய்தால் தூதரகங்களை மூட வேண்டும். பேச்சுவார்த்தைக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச வாய்ப்பும் இல்லாமல் போய் விடும். அங்கே தமிழ் மக்களுக்கு என்ன நடந்தாலும் நமக்கு தகவல் கிடைப்பதில் துவங்கி தலையிடுவதுவரை சிக்கலாகுமல்லவா?

**கேள்வி : பொருளாதாரத்தடை விதிப்பது இலங்கை அரசை நிர்ப்ப ந்திக்க உதவுமல்லவா?**

ஜி.ஆர் : நாம் பொருளாதாரத் தடை என்றால் இலங்கை மேலும் மேலும் சீனா, அமெரிக்கா உள்ளிட்ட பிற நாடுகளைச் சார்ந்து நிற்கும் நிலைக்குத் தள்ளப்படும். பொருளாதாரத் தடை பெரிதும் ஏழை எளிய மக்களைத்தான் பாதிக்கும். இராக்கிலும், கியூபாவிலும் நமக்குக் கிடைத்திருக்கும் அனுபவம் அதுதானே. தவிரவும் இலங்கையிலிருந்து நமக்கு இறக்குமதியை விட ஏற்றுமதிதான் அதிகம். அதிலும் குறிப்பாக தமிழகத்திலிருந்துதான் ஏற்றுமதி அதிகம். (நான் கொழும்பில் உள்ள ஒரு துணிக்கடைக் குச் சென்ற போது அந்த வியாபாரி சொன்னது 'நாங்க சென்னை பாண்டி பஜாரிலிருந்து தான் இந்தத் துணிகளையெல்லாம் வாங்கி வருகிறோம். வேணுமானா வாங்கிக்கிங்க..) இலங்கையில் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் கணிசமாகப் பொருள் முதலீடு செய்துள்ளன என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். இலங்கை அரசை நிர்ப்பந்திக்க அரசியல் ரீதியான உபாயங்களைக் கையாள வேண்டும்.

**கேள்வி: போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை மார்க்சிஸ்ட் கட்சி ஏன் ஏற்கவில்லை. உள்ளக விசாரணை என்ற பேரில் கொலையாளியையே நீதிபதியாக்குவது எந்த வகையில் நியாயமாகும்?**

ஜி.ஆர் : சர்வதேச விசாரணை என்ற பேரில் அமெரிக்க ஏகாதிபத்தியம் உள்ளே நுழைந்துவிடக்கூடாது என்பதுதான் நமது கவலை. அதன் பொருள் விசாரணையை ராஜபக்ஷேயின் கையில் ஒப்படைத்துவிட வேண்டும் என்பதல்ல. ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலுடன் கலந்து பேசி (அப்படி ஒரு குறிப்பு இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்திலும் இருக்கிறது) சுயேச்சையான, சர்வதேச நம்பகத்தன்மை கொண்ட இலங்கைக்கு வெளியில் உள்ள சர்வதேச மதிப்புடைய நீதிமான்களையும் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும். இலங்கையிலுள்ள தமிழர்களிலிருந்தும் கூட அத்தகைய மதிப்புமிக்க நீதிமான்கள் விசாரணைக் குழுவில் சேர்க்கப்பட வேண்டும். இத்தகைய சுயேச்சையான விசாரணையை ஏற்றிட இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். விசாரணைக்குழு முற்றிலும் வெளியிலிருந்து என்று தீர்மானம் வந்தால் இப்போது ஐ.நா.மனித உரிமைக் கவுன்சிலில் இத்தீர்மானத்தை ஆதரித்த நாடுகளும் கூட ஆதரித்திருக்காது என்பது தான் அமெரிக்கப் பிரதிநிதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கூறிய பதில் (அவரே இதை எம்மிடம் கூறினார்). அவரவர் நாட்டுப் பிரச்சனைகளோடு பொருத்தித் தான் அவர்கள் இதைப் பார்ப்பார்கள். இத்தகைய சர்வதேச அரசியல் சூழலையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அமெரிக்கா சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் இலங்கைக்கு எதிரான ஒரு

(மிகுதி அடுத்த வாரம்)



''செம்மலர்'' - மே மாத இதழுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச்செயலாளர் தோழர். ஜி. ராமகிருஷ்ணன் அளித்த பேட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 'துக்ளக்' - 4

இலங்கையில் 'துக்ளக்'

# இன்னமும் அகற்றப்படாத கண்ணி வெடிகள்!

கடந்த வாரத் தொடர்ச்சி

நமது நிருபர்கள் எஸ்.ஜே. இதயா, மற்றும் ஏ.ஏ. சாமி ஆகியோர், ஆறு நாட்கள் இலங்கையின் பல பகுதிகளுக்குச் சென்று, அங்குள்ள பல தரப்பினரிடமும் பேசி, செய்திகளைச் சேகரித்து வந்துள்ளனர். இந்த இதழில் கிளிநொச்சி பகுதியில் அவர்கள் பார்த்தவற்றையும், பலரிடம் பேசியவற்றையும் பகிர்ந்து கொள்கிறார்கள்:

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரும் ஏ9 நெடுஞ் சாலையில் பகலில் பயணம் செய்ததால், இடையில் ஒரு குறிப் பிட்ட பகுதியில் சாலையின் இரு மருங்கிலும் சிவப்புக் கலரில் மண்டையோடும், இரு எலும்புகளும் கொண்ட எச்சரிக்கைப் பலகைகளை எங்களால் கவனிக்க முடிந்தது. உடனே காரை அங்கே நிறுத்தச் செய்து இறங்கினோம். அவ்வளவுதான்... அருகிலிருந்த புதருக்குள்ளிருந்து சரசரவென ஆறேழு பேர் வித்தியாசமான யூனிஃபார்மில், முகத்தை மூடிய கண்ணாடி, கையில் வாக்கி டாக்கி சகிதம் எங்களை நோக்கி ஓடி வந்தனர். "காரை இங்கு நிறுத்தக் கூடாது. உடனே கிளம்புங்கள்" என்று எங்களை விரட்டினர்.

நாங்கள் தமிழர்கள் என்பதை முகத்தைப் பார்த்தே உணர்ந்து கொண்ட ஒருவர், "இங்கே மிதிவெடிகளை (கண்ணி வெடி) அகற்றும் பணி நடந்து கொண்டிருக்கிறது. எந்த நேரமும் ஏதாவது ஒன்று வெடிக்கக் கூடும். எனவே, இங்கு வாகனங்களை நிறுத்த அனுமதியில்லை. உடனே அகன்று செல்லுங்கள்" என்று எச்சரித்தார். அப்போதுதான் அந்த எச்சரிக்கைப் பலகைகளையும் நாங்கள் கவனித்தோம். 'மிதிவெடி அபாயம்' என்று எழுதப்பட்டிருந்தது.

இதையடுத்து நாங்கள் காரில் கிளம்பி விட்டோம். சில கிலோ மீட்டர்களுக்கு அந்த எச்சரிக்கைப் பலகைகள் தொடர்ந்து காணப்பட்டன. இரு பக்கமும் பல பேர் கண்ணி வெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். மண்ணைத் தோண்டி வெடிகள் இல்லை என்பதை உறுதி செய்த பின்னர், அப்பகுதிகளில் குச்சி ஊன்றி அதைப் பாதுகாப்பான பகுதி என்று அடையாளப்படுத்துகின்றனர். (ஏற்கெனவே அந்தப் பகுதிகளில் ஆளில்லா ரோபோ வாகனம் ஒன்றை ஓடவிட்டு, வெடிகளை வெடிக்கச் செய்து விடுவார்களாம். அதன் பின்னர், ஆட்கள் மூலம் மண்ணைத் தோண்டி வெடி எதுவும் இல்லை என்று உறுதி செய்வார்களாம். உயிரைப் பணயம் வைத்து நடக்கும் அந்த வேலை சிரமமானது என்பதைப் பார்த்ததுமே தெரிந்து விடுகிறது. முதலில் மீள் குடியேற்றப் பகுதிகளில் வெடி களை அகற்றி, மக்களைக் குடியேற்றும் பணி நடந்ததாம். அது முடிவுற்ற பிறகு, இந்த வனப் பகுதியில் வேலை நடக்கிறதாம். இந்தத் தகவல்களை பின்னர் நாங்கள் சந்தித்த ராணுவ அதிகாரி மூலம் தெரிந்து கொண்டோம்.)

மேலும், அந்தப் பகுதியில் இருந்த பனை மரங்கள் அனைத்தும், மேலே கீற்றுகளை இழந்து வெறும் கம்பங்களைப் போல நின்றன. அந்தப் பகுதியின் முக்கியத்துவத்தை எங்களுக்குக் கார் ஓட்டிய தமிழ் டிரைவர் விளக்கினார். "2004 முதலே யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடத் துவங்கி விட்டது. துறைமுகம் மற்றும் விமான நிலையம் இருந்ததால், பெருமளவில் ராணுவத்தைக் கொண்டு வந்து இறக்கி, இலங்கை அரசு யாழ்ப்பாணத்தைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டது. ஆனால், கிளிநொச்சி பகுதி 2009 ஜனவரி வரை புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

"இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி செல்லும் இந்தப் பாதையில் ராணுவம் முன்னேறி வந்ததால், இப்பகுதி முழுக்க கண்ணி வெடிகளைப் புலிகள் புதைத்து விட்டனர். இதனால் இப்பகுதியில் பல ஆண்டுகள் கடும் போர் நடந்தது. வான்வெளித் தாக்குதல்கள் அதிகம் நடந்தன. இதில்தான் இந்தப் பகுதி மரங்கள் அத்தனையும் அழிந்தன. இந்தப் பகுதிகளில் தொடர் வான்வெளித் தாக்குதல்களை நடத்தி, புலிகளை அப்புறப்படுத்திய ராணுவம், பல மாதங்கள் கண்ணி வெடிகளை அகற்றி, பாதை ஏற்படுத்தி முன்னேறிச் சென்று கிளிநொச்சியைக் கைப்பற்றியது" என்று கூறிய டிரைவர், "கண்ணிவெடிகள் அதிகபட்சமாக புதைக்கப்பட்ட பகுதி இது என்பதால், இன்னும் இந்தப் பகுதிகளில் வெடிகளை அகற்றும் பணி முடிவடையவில்லை" என்று குறிப்பிட்டார்.



கிளிநொச்சி நகரத்தை நெருங்கியதும், வழியில் ராணுவமும், போலீஸும் எங்கள் காரை வழி மறித்தன. ஏதோ விசாரிக்கப் போகிறார்கள் என்று நாங்கள் நினைத்தபோது, ஒரு துண்டுப் பிரசுரத்தை மட்டும் எங்கள் கையில் கொடுத்து, பாதுகாப்பாக வாகனத்தை ஓட்டுமாறு டிரைவரைக் கேட்டுக் கொண்டு வழியனுப்பி வைத்தனர்.

கிளிநொச்சியை அடைந்தபோது, அது பளிச்சென இருந்தது. புதிய பள்ளிகள், புதிய அரசு அலுவலகங்கள், புதிய நீதிமன்ற வளாகங்கள், புதிய துணைமின் நிலையங்கள் ஆகியவை பளபளவென நின்றன. தமிழர்களின் தனியார் கட்டிடங்களும், புதுப்பிக்கப்பட்ட புதுப்புது ஜவுளிக் கடைகள், நகைக் கடைகள், ள வீலர் ஷோரூம்கள் எல்லாம் காணப்பட்டன. பள்ளி மாணவ- மாணவியர் யூனிஃபார்முடன் ஆள் நடமாட்டமில்லாத சாலைகளில் கூட, எந்தவிதப் பயமுமின்றி சைக்கிள்களில் பயணம் செய்ததைப் பார்க்க முடிந்தது.

வீ.ஆனந்த சங்கரியின் அலுவலகத்தை நாங்கள் அடைந்தபோது, அதையடுத்த நிலத்தில் ஒரு ராட்சத வாட்டர் டேங்க் தரையோடு சாய்ந்து கிடந்தது.



அதைப்பற்றி அந்த வழியே போனவர்களிடம் விசாரித்த போது, 'இந்நகரைக் கைப்பற்றும் ராணுவத்தினருக்கு தண்ணீர் வசதி இருக்கக் கூடாது என்பதற்காக, இந்த வாட்டர் டேங்கை விடுதலைப் புலிகள் வெடி வைத்துத் தகர்த்து விட்டனர். இங்கிருந்த அரசுக் கட்டிடங்களையும் அவர்கள் வெடி வைத்துத் தகர்த்து விட்டுத்தான் வெளியேறினர்' என்றார்கள்.

அதைப் படமெடுத்துக் கொண்டு, அடுத்த வாசலில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நுழைந்து, அதன் செயலாளரான முன்னாள் எம்.பி. வீ.ஆனந்த சங்கரியைச் சந்தித்தோம். முன்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பில் (டி.என்.ஏ.) இருந்தவர், தற்போது அந்தக் கூட்டமைப்பை விட்டு வெளியேறி விட்டார். "ராஜபக்ஷ எந்த அளவு குற்றவாளியோ, அதே அளவு குற்றவாளிதான் புலிகள் தலைவர் பிரபாகரனும். கடும் போரின் போதும் வன்னிப்பகுதி தமிழர்களை வெளியே விடாமல், தனக்கு அரணாக வைத்துக் கொண்டு பல தமிழ்க் குடும்பங்களை அழித்தொழித்தார். தமிழர்களை அழித்ததில் பிரபாகரனுக்கு எவ்வளவு பங்கு இருக்கிறதோ, அதே பங்கு டி.என்.ஏ.க்கும் இருக்கிறது.

"பிரபாகரனை ஒரு அரசியல் தீர்வுக்குத் தயார் படுத்தாமல், அவரது அழிவுக்கும், ஆயிரக்கணக்கான தமிழர்களின் அழிவுக்கும் டி.என்.ஏ.வும் ஒரு காரணமாக இருந்தது. கடைசிக் கட்டப் போரின்போது, விடுதலைப் புலிகளின் வளையத்துக்குள்ளே லட்சக்கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்தும், டி.என்.ஏ. அவர்களைக் காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பிரபாகரன் இருந்தால் நாம் அரசியல் செய்ய முடியாது, அவரும் அவரது குடும்பமும் அழியட்டும் என்று நினைத்தார்களோ

(7ம் பக்கம் பார்க்க)

# தமிழக மீனவர்கள் செய்வது சரியா?

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை அரசால் தாக்கப்படுவது குறித்து தொடர் சர்ச்சை எழுந்தபடியே இருக்கிறது. யாழ்ப்பாணத் தமிழர்களுக்காக இங்கு குரல் கொடுப்போர்தான் பெரும்பாலும், தமிழக மீனவர்களுக்காகவும் இங்கு குரல் கொடுக்கிறார்கள். எனவே, தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து யாழ்ப்பாண தமிழ் மீனவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிய முயற்சித்தோம்.

ச் சந்தித்துப் பேசினோம். "இலங்கைக் கடலோரத்தில் மீன்கள் அதிகம். இதனால் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்கரை வரை வருகிறார்கள். நாங்கள் எங்கள் கரைகளில் இருந்தபடி பலமுறை இந்திய மீனவர்களின் படகுகளைப் பார்த்திருக்கிறோம். நாங்களும் சரி, அவர்களும் சரி, படகுகளைக் கிளப்பி ஒன்றரை மணி நேரத்தில் அடுத்த நாட்டு எல்லைக்குள் நுழைந்து விட முடியும்.

"ஒரு காலத்தில் இங்கு நடந்த போரின் காரணமாக, நாங்கள் தொழில் செய்யவே பயந்து வேறு தொழில களுக்குப் போய் விட்டோம். அதனால், இந்திய மீனவர்கள் எங்கள் கடற்பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி மீன் பிடித்து வந்தனர். இப்போது இங்கு பல பேர் வெவ்வேறு தொழில்களை இழந்து, இந்த மீன் பிடி தொழிலுக்கு வந்துள்ளனர். இதனால் இப்போது இந்திய மீனவர்களின் ஆதிக்கத்தை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எங்களை விட இந்திய மீனவர்கள் தொழில் நுணுக்கமும், உயரிய தொழில்நுட்பமும் கொண்டு தொழில் செய்கிறார்கள். இதனால் அவர்களை மீறி மீன்பிடி தொழில் செய்வது எங்களுக்கு மிகுந்த சிரமமாக இருக்கிறது.

"இங்கு மடி போடும் விசைப் படகுகளுக்குத் தடை உள்ளது. இந்திய மீனவர்களோ ஒற்றை மடிக்கு மேல் இரட்டை மடி போட்டுக் கூட மீன்களைக் கவர்ந்து சென்று விடுகின்றனர். கச்சத்தீவு அந்தோணியார் கோவில் திருவிழாவுக்குச் சென்ற போது, அங்கு வந்திருந்த இந்திய மீனவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த முயற்சி செய்தோம். ஆனால், பேச்சுவார்த்தைக்கு வராமல் கிளம்பி விட்டனர். அவர்களும் தமிழர்கள், நாங்களும் தமிழர்கள். இதை எப்படி அணுகுவது என்று தெரியவில்லை. பேசாமல் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கு தனி மீன்பிடி காலமும், எங்களுக்குத் தனியே மீன் பிடி காலமும் ஒதுக்கி விட்டால் பிரச்னை எழாது. எங்களுக்கு மீன் பிடி காலம் இல்லாத நாட்களில், நாங்கள் வேறு தொழில் செய்து பிழைத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்" என்றார் அவர்.

'போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம்' என்ற அமைப்பு, கடந்த ஆண்டு இலங்கை வடக்குக் கடலோரப் பகுதிகளில், சுமார் 600 கி.மீ. தொலைவிற்கு ஒரு பாத யாத்திரை நடத்தியுள்ளது. இந்திய மீனவர்கள் இரட்டை மடி மூலம் மீன் பிடிப்பதை தடுக்கக் கோரியே இந்த யாத்திரை நடத்தப்பட்டிருக்கிறது.

"இந்திய மீனவர் படகுகள் அனைத்திலும் ஜி.பி.எஸ். கருவிகளைப் பொருத்தி சாட்டிலைட் மூலம் கண்காணித்தால், அவர்கள் எந்தப் பகுதியில் சென்று மீன் பிடிக்கிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகி விடும். அதை இந்திய அரசு செய்யுமா?" என்றும் யாழ்ப்பாணத்தின் சில மீனவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 'துக்ளக்' - 4

# தமிழர்களைச் சமமாக நடத்த இனி வரும் அரசாங்கங்கள் நடவடிக்கை எடுத்தால், அதுவே போதுமானது

(6ம் பக்கத் தொடர்ச்சி)

என்னவோ தெரியவில்லை" என்று குறிப்பிட்டார் ஆனந்த சங்கரி.



மேலும் அவர், "பல கட்டங்களில் தீர்வுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. ராஜபக்ஷ கூட ஒரு கட்டத்தில் இந்திய மாடல் மாகாணசபைத் தீர்வுக்கு ஒத்து வந்தார். ஆனால், புலிகள் அழிவை மட்டுமே தேர்வு செய்தனர். கடைசிக் கட்டத்தில் கூட ராஜபக்ஷ் தமிழ் கட்சிகளை அழைத்துப் பேசினார். 'ஏறக் குறைய 65 ஆயிரம் தமிழர்கள் ராணுவத்திடம் வந்து தஞ்சம் அடைந்து விட்டனர். இன்னும் சுமார் 20 ஆயிரம் மக்கள்தான் புலிகள் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள்' என்று எங்களிடம் குறிப்பிட்டார் ராஜபக்ஷ. ஆனால், நான் அதை மறுத்தேன். 'இன்னும் 3 லட்சம் மக்கள் புலிகளின் கட்டுபபாட்டில் இருக்கிறார்கள்' என்று தெரிவித்தேன். ராஜபக்ஷ என் மீது கோபப்பட்டார். 'பொய் சொல்லாதீர்கள்' என்றார்.

"ஆனால், நான் ஆணித்தரமாக அடித்துச் சொன்னேன். அதன் பிறகு அவர் கொஞ்சம் நம்பினார் என்றே சொல்ல வேண்டும். அதனால்தான் அனுப்பும் உணவுகளைக் கூடுதலாக அனுப்பச் சொன்னார். (போர் நடக்கும்போதும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில், புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த தமிழர்களுக்கு, தினசரி உணவு அனுப்பப்பட்டுள்ளது.) அதோடு, மீண்டும் பல 'நோ ஃபயரிங் ஜோன்'களை உருவாக்கி, மக்கள் வெளியே வந்து ராணுவத்தின் 'ரிஸீவிங் பாயின்ட்'டில் தஞ்சம் புகலாம் என்று ராஜபக்ஷ அறிவித்தார். முதல் நாளே உள்ளிருந்து 85 ஆயிரம் பேர் 'ரிஸீவிங் பாயின்ட்'டுக்கு வந்து சேர்ந்தனர். அடுத்தடுத்த நாட்களில் சுமார் 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் வெளியே வந்து விட்டனர். அதன் பிறகுதான் போர் மேலும் தீவிரமடைந்து முடிவுக்கு வந்தது" என்று குறிப்பிட்டார்.

"புலிகள் மீது பெருந்தவறு என்றாலும், அது பயங்கரவாதக் குழு என்பதால், அது தமிழர்களைக் கொன்று குவித்தாலும் அந்தக் குழுவைத் தண்டிக்க முடியாது. ஆனால், அதே தவறை ஒரு அரசாங்கம் செய்யக் கூடாது. அதற்குச் சில கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். பொறுமை இழந்து ஆயிரக்கணக்கான மக்களையும் சேர்த்துக் கொன்றொழிக்கக் கூடாது. இப்போது என்னதான் உலக அளவில் மனித உரிமைப் பிரச்னைகளை எழுப்பினாலும், ராஜபக்ஷவை யாரும் தூக்கில் போட்டு விட முடியாது. ஆண்டவன் மட்டும்தான் தண்டனை அளிக்க முடியும். இல்லையென்றால், அடுத்து வருகிற ஆட்சி விசாரணை நடத்தி, அவருக்குத் தண்டனை அளிக்க வேண்டும். இதெல்லாம் நடக்கிற காரியமில்லை.

"ஆனால், தமிழர்களைச் சமமாக நடத்த இனி வரும் அரசாங்கங்கள் நடவடிக்கை எடுத்தால், அதுவே போதுமானது. இஸ்லாமிய பயங்கரவாதத்தை எதிர் கொண்டிருக்கும் நாடாக இருந்தாலும், ஒரு இஸ்லாமியரான அப்துல் கலாமை அதிபர் ஆக்கியது இந்தியா. இந்திரா காந்தியை வீழ்த்தியவனைச் சார்ந்த சமூகம், நாட்டில் பிரிவினை கோரியவர்களைச் சார்ந்த சமூகம் என்று ஒரு சிலருக்காக ஒரு சமூகத்தையே குற்றவாளியாக்காமல், பெருந்தன்மையுடன் ஒரு சீக்கியரை பிரதமராக்கியுள்ளது இந்தியா. காந்தி பிறந்த இந்தியா காட்டும்

(11ம் பக்கம் பார்க்க)

## பாலச்சந்திரனைக் கொன்றது யார்?

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் படங்கள்தான், தமிழகத்தில் அமுங்கியிருந்த இலங்கைத் தமிழர் பற்றிய உணர்வுகளை மீண்டும் வெளிப்படச் செய்தது எனலாம். அதன் பின்தான் தமிழகத்தில் போராட்டங்கள் கிளம்பின. இது குறித்து ராணுவ அதிகாரிகளிடம் நாங்கள் கேள்விகளை எழுப்பினோம்.

"பாலச்சந்திரன் உடல் எங்களுக்குக் கிடைத்தது உண்மை. ஆனால், கொன்றது யார் என்பது தெரியாது. வெளியான ஒரு புகைப்படத்தில் இலங்கை ராணுவ உடை தெரிவதால், இது ராணுவத்தின் செயல் என்று சிலர் குற்றஞ்சாட்டுகிறார்கள். புலிகள் பல நேரங்களில் இலங்கையின் ராணுவ உடைகளையே பயன்படுத்தி வந்தனர் என்பது உலகறிந்த உண்மை.

"மேலும் இன்றைய உலகம் டிஜிட்டல் உலகம். ஃபோட்டோக்களில் எதையும் எப்படியும் மாற்றியமைக்க முடியும். அதையும் தாண்டி 'அந்தச் சிறுவன் மணல் மூடைகளால் வழப்பட்ட ஒரு பதுங்கு குழியில் இருக்கிறான்' என்பது மட்டும்தான் அந்தப் படம் சொல்லும் உண்மை. அது புலிகளின் பதுங்கு குழியாகவும் இருக்கலாம். புலிகள், ராணுவத்திடம் சிக்காமல் சாவதற்காக சயனைட் குப்பிகளைக் கடிக்கத் தயாராக இருப்பவர்கள். அந்தச் சிறுவன் ராணுவத்திடம் உயிரோடு சிக்கி விடக் கூடாது என்று புலிகள் கூட முடிவு எடுத்திருக்க முடியுமே?

"சிறுவனை இரக்கமில்லாமல் சுட்டுத் தள்ளியவர்கள் இலங்கை ராணுவத்தினர் என்று குற்றஞ்சாட்டுபவர்கள், அந்தச் சிறுவனுக்கு ராணுவம் ஏன் பிஸ்கட் தந்து சுட்டுத் தள்ள வேண்டும் என்ற கேள்வியை தங்களுக்குள் எழுப்பிப் பார்க்க வேண்டும்? ஒரு பாலகனைக் கொல்லும் கல் நெஞ்சம் படைத்தவர்கள், அவனின் பசிக்கு பிஸ்கட் கொடுத்தா உபசரித்திருப்பார்கள்?" என்று அவர்கள் என்னிடம் கேள்வி எழுப்பினார்கள்.

"தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு இலங்கையைப் பற்றிப் பெரும்பாலும் தவறான தகவல்களே தரப்படுகின்றன. இவற்றைப் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள்தான் இன்டர்நெட் மூலம் பரப்புகிறார்கள் என்று நினைக்கிறோம். இது டிஜிட்டல் உலகம். க்ராஃபிக்ஸில் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். இலங்கைப் படை வீரர்களை, விடுதலைப் புலிகள் பிடித்து வைத்துக் கொன்ற காட்சிகளைக் கூட, இலங்கை ராணுவம் தமிழர்களைக் கொன்றதாக மாற்றிப் பிரசாரம் செய்தார்கள். பயங்கரவாதிகள் எப்படி வேண்டுமானாலும் செயல்படலாம். ஆனால், ஒரு அரசு சார்ந்த ராணுவ வீரர்கள், நாளை பல பேருக்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்பந்தம் உண்டு. அதனால் அவர்கள் எப்படி வேண்டுமானாலும் செயல்பட்டு விட முடியாது என்பதை தமிழக மக்கள் மறந்து விடக் கூடாது" என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்த சங்கரி எங்களிடம் இதுபற்றி பேசியபோது, "அந்தச் சிறுவனின் மரணம் தமிழகத் தமிழர்களை உலுக்கியதில் ஆச்சரியமில்லை. பாலகனின் மரணம் எந்த மனிதனையும் உலுக்கும் வலு படைத்தது. அதே தமிழகத் தமிழர்கள், விடுதலைப் புலிகள் கொன்று குவித்த பாலகர்களின் எண்ணிக்கையையும் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும்" என்று கூறி, விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் இறந்து போன சிறார்களின் புகைப்படங்கள் வெளியான பல நாளிதழ்களை எங்கள் முன் எடுத்துப் போட்டார். "இந்தச் சிறுவர்களின் மரணத்திற்கெல்லாம் நாம் இதே இரக்கம், கருணை காட்ட வேண்டாமா?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

ஆனால், தமிழகத்தைப் போலவே நாங்கள் சந்தித்த இலங்கைத் தமிழர்கள் பலரும், பாலச்சந்திரன் மரணம் குறித்து உருக்கமாகவே பேசினர். அந்தச் சிறுவனின் இறப்புக்கு இலங்கை ராணுவமே காரணம் என்று அங்குள்ள பெரும்பாலானோர் கருதுகிறார்கள். எனினும் வீட்டுக்கு வீடு இதுபோன்ற சிறார்களை அவர்கள் பலி கொடுத்திருப்பதால், தமிழகம் அளவுக்கு அந்த மரணம் அவர்களைப் பெரிதாக பாதிக்கவில்லை. பிரபாகரனின் மரணம் கூட அங்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அவர்கள் எந்த மரணத்தையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளுமளவிற்கு விரக்தியின் விளிம்பில் இருக்கிறார்கள்

## விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து தப்பித்த மக்கள்!

விடுதலைப் புலிகள் தங்கள் பிடியில் இருந்த நகரத்தை இழக்கும் நிலையில், அடுத்த நகரத்துக்கு நகருவார்கள். அப்போது அங்குள்ள தமிழ் மக்களையும் தங்களுடன்



அழைத்துக் கொண்டே நகர்ந்து விடுவார்கள். அப்படி அடுத்த நகரத்துக்கு நகரும்போது, தாங்கள் கடந்து போகும் பகுதியில் எல்லாம் கண்ணி வெடிகளைப் புதைத்து விடுவார்கள். ராணுவம் பின் தொடர்ந்து வந்துவிடக் கூடாது என்பதற்காக அந்த ஏற்பாடு. இதனால், போர் நடக்கும் பகுதியிலிருந்து தமிழ் மக்கள் தப்பியோடும் வாய்ப்பும் இருக்கவில்லை. அதை மீறித் தப்பி வந்தாலும், தங்களைப் புலிகள் என்று சந்தேகித்து ராணுவத்தினர் சுட்டு விடுவார்களோ என்ற அச்சமும் அம்மக்களிடையே இருந்துள்ளது.

பொதுமக்களை அப்புறப்படுத்தாமல் தொடர்ந்து போர் நடத்துவதால், இன அழிப்பு என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக வேண்டிய நிலை இலங்கை ராணுவத்திற்கும் இருந்தது. இந்த நிலையில்தான் இலங்கை ராணுவம் 'நோ ஃபயர் ஸோன்'களை அறிவித்து, அப்பகுதிகளில் 'ரிஸீவிங் பாயின்ட்'களைத் திறந்து, 'பொதுமக்கள் வந்து சரணடையலாம்' என்று அறிவித்தது. ராணுவம் இப்படி அறிவித்ததும், ஏராளமான தமிழ்க் குடும்பங்கள் புலிகளின் எச்சரிக்கையையும் மீறித் திரள் திரளாக ரிஸீவிங் பாயின்ட்டிற்கு புறப்பட்டுச் சென்றனர்.

சுதந்திராபுரத்தில் முதன் முதலாக மக்கள் அப்படி விடுதலைப் புலிகளின் எச்சரிக்கையை மீறித் திரண்டபோது, ஒரு பெண் புலியும், ஒரு ஆண் புலியும் மனித வெடிகுண்டாக மாறி, ரிஸீவிங் பாயின்டுக்குச் சென்ற தமிழ் மக்களிடையே வெடித்துச் சிதறினார்கள். இதில், உயிருக்குப் பயந்து ராணுவத்திடம் சரணடைய வந்த அப்பாவித் தமிழர்கள் பலர் செத்து மடிந்தார்கள். இதையடுத்து, 'ரிஸீவிங் பாயின்ட்'டுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை மீண்டும் குறைந்து விட்டது.

ஆனால், புலிகள் பலமிழந்து முள்ளிவாய்க்கால் பகுதியை நோக்கிப் பின்வாங்கப் பின்வாங்க, அவர்களின் பிடியில் இருந்த பகுதிகள் கணிசமாகக் குறைந்தன. சுமார் 3 லட்சம் மக்கள், ஒரு குறைந்த பரப்பளவில் வேலையில்லாமல், உணவுக்கு வழியில்லாமல் அல்லாடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில், தொடர்ந்து இலங்கை ராணுவம் அதிகப்படியான இடங்களில் 'நோ ஃபயர் ஸோன்'களை அறிவித்ததால், புலிகளை மீறி, மக்கள் ரிஸீவிங் பாயின்ட்டுகளுக்கு வரத் துவங்கியுள்ளனர். 'இனிமேலும் தாக்குப் பிடிக்க முடியாது' என்ற வழலில், புலிகள் இயக்கத் தலைமைக்குத் தெரியப்படுத்தாமல் ஆயிரக்கணக்கான விடுதலைப் புலிகளே மக்களை வெளியே செல்ல அனுமதித்து, அவர்களோடு தாங்களும் சிவிலியன்களைப் போல் வந்து ராணுவத்திடம் சரணடைந்துள்ளனர். இவையெல்லாம் யாரோ சொன்ன தகவல்கள் இல்லை. அப்பகுதியில் இருந்து தப்பி வந்த மக்களும், முன்னாள் விடுதலைப் புலிகளும் சொன்னவைதான். ஆடியோ, வீடியோவில் பதிவு செய்யப்பட்ட அவர்களின் முழுமையான பேட்டி விவரங்கள் அடுத்து வரும் இதழ்களில் இடம் பெறவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு தேர்தலில் சுயேட்சைக்குழு: அரசு களமிறக்க திட்டமாம்!

வரும் செப்ரெம்பரில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்தலில், சிறிலங்கா அரசாங்க ஆதரவுடன் சுயேட்சைக் குழுவொன்று போட்டியிடலாம் என்று அரசியல் வட்டாரங்களில் தகவல்கள் அடிபடுவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிவில் சமூகப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவொன்று தாம் தனித்துப் போட்டியிடவுள்ளதாக, சிறிலங்கா அரசின் உயர்மட்டப் பிரதிநிதிகளிடம் கூறியுள்ளதாக, நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் உள்ள பெரும்பாலான மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஈபிடிபி மீதும் வெறுப்புற்றிருப்பதாகவும் அந்தக் குழுவினர் சிறிலங்கா அரசிடம் விளக்கியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வடக்கு முதல்வர் பதவிக்குப் போட்டியிட விரும்புவதாக டக்ளஸ் தேவானந்தா அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கிகளை உடைப்பதற்காக, செல்வாக்கு மிக்க சிலரைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் சுயேட்சைக் குழுக்களாகப் போட்டியிட வைத்தது போன்று, இந்தத் தேர்தலிலும் அரச ஆதரவு பெற்ற சுயேட்சைக் குழுக்கள் பல களமிறக்கப்படலாம் என்று கருதப்படுகிறது

## சிறிலங்கா ஜனாதிபதிக்கு உதவும் பிரணாப் முகர்ஜி!

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்கு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியே உதவி வழங்கி வருவதாக உள்நாட்டு ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



பொது நலவாய நாடுகளின் மாநாட்டை இந்த ஆண்டு இலங்கையில் நடத்தக் கூடாது என்ற அழுத்தம் அதிகரித்திருந்த போதும், இந்த மாநாடு இலங்கையில் நடத்தப்படும் என்ற தீர்மானத்தில் மாற்றங்கள் இல்லை என்று அதன் பொது செயலாளர் கமலேஸ் சர்மா அறிவித்திருந்தார்.

இதன் பின்னணியில் பிரணாப் முகர்ஜி இருப்பதாக அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதனை இலங்கையில் வெளியுறவுகள்துறை அமைச்சு ஒப்புக் கொண்டிருப்பதாகவும் அந்த பத்திரிகை தெரிவித்தள்ளது.

இலங்கை தொடர்பிலான இந்தியாவின் பல்வேறு தீர்மானங்களின் பின்னணியிலும் ஜனாதிபதியை பாதுகாக்கும் தேவதையாக பிரனாப் முகர்ஜீ செயற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்சவுக்கும், பிரணாப் முகர்ஜிக்கும் இடையிலான உறவு கடந்த யுத்த காலத்தில் இருந்து ஆரம்பித்தது.

யுத்தத்தின் இறுதி நாளுக்கு முன்னதாக பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டு, இரண்டு மணித்தியாலங்களுக்குள் நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச்செய்ய அரசு மறுப்பு!

எதிர்க்கட்சி கேட்டுக்கொண்ட போதும் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய முடியாது என அரசாங்கம் கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை (7) நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர் தி.மு. ஜயரட்ன, உலகின் பல பாகங்களிலும் புலி இயக்கத்தை மீளக்கட்ட முயற்சிகள் நடப்பதாக தெரிவித்தார்.

யுத்தம் முடிந்த பின் புனர்வாழ்வுக்காக சரணடையாத விடுதலை புலி சந்தேக நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க பயங்கரவாத தடைச் சட்டம் தேவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு தமிழ் அரசியல் கட்சி ஆதரவாளரை கொல்ல 2012 மார்ச் 17ஆம் திகதி இரண்டு புலி உறுப்பினர்கள் திட்டம் தீட்டியமை, தென்னிந்தியாவில் இவ்வாறான நால்வர் டிசம்பர் 20ஆம் திகதி கைது செய்யப்பட்டமை ஆகியன இந்த இயக்கத்தை புதுப்பிக்க எடுக்கும் முயற்சிகளை காட்டுகின்றன என பிரதமர் தெரிவித்தார்.



பயங்கரவாத இயக்கம் ஒன்றுடன் தொடர்பு இருப்பதாக குற்றஞ்சாட்டி அசாத் சாலியை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ததாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

அசாத் சாலி இந்தியாவில் அளித்த ஒரு பேட்டியின்போது, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையை ஆயுதங்களினால் எதிர்கொள்ள வேண்டும் என கூறியுள்ளார். இதன் மூலம் சமூகங்களுக்கு இடையில் பதற்றத்தை தோற்றுவித்தார் என்பது அவருக்கு எதிரான குற்றச்சாட்டாகும் என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

## பாக். தீவிரவாதியை இந்தியா இலங்கைக்கு நாடுகடத்தியது!

பாகிஸ்தான் தீவிரவாதி ஒருவரை இந்தியா, இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளது. 34 வயதான நிஸார் அஹமட் என்ற நபரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளார். உரிய வீசா இன்றி ஆந்திர பிரதேசத்தின் சுட்டப்பா கிராமத்தில் வாழ்ந்து வந்த போது குறித்த நபரை மாநில காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கடந்த ஏழு ஆண்டுகளாக உரிய வீசா எதுவுமின்றி குறித்த தீவிராவதி இந்தியாவில் வாழ்ந்து வந்துள்ளார். பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு சென்று அங்கிருந்து அவர் இந்தியாவிற்கு சென்றுள்ளார். இலங்கையிலிருந்து இந்தியா சென்ற காரணத்தினால் அவரை இந்திய அதிகாரிகள் இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளனர்.

சென்னையிலிருந்து குறித்த நபர் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இந்த நாடு கடத்தல் தொடர்பில் இந்திய அதிகாரிகள் இலங்கைக்கு அறிவித்துள்ளனர். இலங்கை அதிகாரிகள் குறித்த தீவிரவாதியை பாகிஸ்தானிடம் ஒப்படைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நோர்வே அகதிகள் கவுன்சில் இலங்கை குறித்து கண்டனம்!

நோர்வே அகதிகள் கவுன்சிலும், ஐ.டி.எம்.சி எனப்படும் உள்நாட்டு இடம்பெயர்வைக் கண்காணிக்கும் மையம் என்ற அமைப்பும் சேர்ந்து வெளியிட்டுள்ள உலகளாவிய உள்நாட்டு இடப்பெயர்வு குறித்த அறிக்கையில் இலங்கையில் போரினால் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தோரின் நிலை இன்னும் முன்னேறவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

2012 இறுதிவாக்கிலான, இலங்கை உள்நாட்டு இடம்பெயர்ந்தோர் நிலவரம் குறித்து சொல்கிறது நோர்வே அகதிகள் கவுன்சிலின் இந்த அறிக்கை.

விடுதலைப்புலிகள் அரச படைகளால் தோற்கடிக்கப்பட்டு மூன்றாண்டுகளுக்கும் மேலான அந்த காலகட்டத்தில், இலங்கையில் சுமார் 93,000 பேர் அகதி முகாம்கள், உறவினர்கள் அல்லது நண்பர்களின் வீடுகள் மற்றும் இடம்விட்டு இடம் மாறிக் கொண்டிருக்கும் சூழ்நிலை ஆகிய நிலைகளில்தான் இருக்கிறார்கள் என்று இந்த அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் மக்களின் நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்த காரணத்தால், சுமார் 26,000 பேர் இன்னும் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியவில்லை என்றும் அது கூறுகிறது.

சொந்த இடங்களுக்கு திரும்பியவர்களும் தங்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளான, இருப்பிடம், குடிநீர், சுகாதாரம் போன்றவைகளைப் பெற முடியாத சூழ்நிலை இருப்பதாக அந்த அறிக்கை கூறியது.

திரும்பியவர்களுக்கு தேவைப்படும் வாழ்வாதார உதவி, சமூக சேவை உதவி, சட்ட உதவி மற்றும் போரின் பாதிப்புகளிலிருந்து மீள உளவியல் ராதியான மற்றும் சமூக ராதியிலான உதவிகள் போன்றவைகள் அவர்களுக்கு போதிய அளவு கிடைக்கவில்லை என்றும் அது கூறுகிறது.

இன்னும் அகற்றப்படாத நிலக்கண்ணி வெடிகள் மற்றும் பிற வெடிபொருட்கள் மக்கள் வாழ்க்கை இயல்பு நிலைக்கு வருவதை சிக்கலாக்கின. கடந்த ஆண்டு இறுதி வாக்கில் இன்னும் 108 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் நிலக்கண்ணி வெடி அகற்றல் பணிகள் நடக்க வேண்டியிருந்தது.

வடக்கிலிருந்து இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட்டு, நிர்வாகப் பொறுப்புகளிலிருந்தும் இராணுவம் அகற்றப்பட வேண்டும் என்று அரசு நியமித்த நல்லிணக்க ஆணையம் கூறியிருந்தும், கடந்த ஆண்டு இறுதிவரை கூட இது நடக்கவில்லை. மேலும், வடக்கே சிவில் நிர்வாகம் செய்ய வேண்டிய பல கடமைகளை இராணுவம் தொடர்ந்து செய்து வருகிறது என்றும் அது கூறியது.

யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லீம்களும் இதே நிலையில் தான் உள்ளனர். அவர்களில் பலர் யாழ்ப்பாணத்துக்கு திரும்பியும், அங்கு நிலையாக வாழ்க்கை நடத்த தேவையான உதவியின்மை மற்றும் உள்ளூர் சமூகத்துடன் இணைந்து வாழ நிலவும் தடங்கல்கள் ஆகியவற்றால், புத்தளத்திலும் வசிப்பது, யாழ்ப்பாணத்திலும் இருப்பது என்ற இருநிலைப்பாட்டுக்கு தள்ளப்ப ட்டுள்ளனர் என்று கூறுகிறது இந்த அறிக்கை.

## மடு ரயில்சேவை ஆரம்பம்!

மடு தேவாலயத்துக்கான ரயில் சேவை இவ்வாரம் ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.



மடு தேவாலய வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகவுள்ளதால் அங்கு செல்லவுள்ள பக்தர்களின் நன்மை கருதி மதவாச்சி யிலிருந்து மடு வரையான சுமார் 106 கிலோ மீற்றர் நீளமான தலைமன்னார் ரயில் பாதை துரித கதியில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் நிதியுதவியில் மேற்கொள்ளப்படுகின்ற இந்த ரயில் பாதை புனரமைப்பு பணிகளில் முதற்கட்டம் தற்போது பூர்த்தியாகியுள்ள நிலையில் அடுத்த கட்ட புனரமைப்புப் பணிகள் ஓரிரு தினங்களில் முடிக்கப்படுமென ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதற்கட்ட பணிகளுக்கு மட்டும் சுமார் 81 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன. ரயில் பாதை புனரமைப்பு பணிகள் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பெடியள் விடாயினம்" என்றவர்கள் இன்று பெடியளை (கை)விட்டு விட்டார்களா?:

## சவாலாகியுள்ள புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் மீளொருங்கிணைப்பு!

இந்த தலைப்பின் முதல் பகுதியை பார்த்தவுடன் பலருக்கு பழைய ஞாபகங்கள் சில மனதில் ஏற்படலாம். ஆமாம்! 1980கள் தொடக்கம் (ஈழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் கை ஓங்கிய காலம்) ஏறத்தாள 2009 மே மாத நடுப்பகுதியில் "முள்ளி வாய்க்கால் முடிவு" ஏற்படும் வரை வடக்கில் அதுவும் குறிப்பாக யாழ் குடாநாட்டில் மூத்த பரம்பரையை சேர்ந்த அதிகமானவர்களால் முணு முணுக்கப்பட்ட ஒரு நம்பிக்கைக்குரிய ஒரு சொல்லாகவே இது இருந்து வந்தது. இதுதவிர "இருந்து பாருமன் பெடியளின் அடியை", "உவங்கள் (இராணுவம்) நல்லா வாங்கிக் கட்டப் போகினம்", போன்றனவும் இம்மக்களினால் அதிகம் பயன்படுத்தப்பட்ட சொற்பிரயோகங்கள் ஆகும். இதுபோன்ற சொற்களும் வசனங்களும் இன்னும் அதிகம் உள்ள போதும் விரிவஞ்சி அவற்றை தவிர்க்க விரும்புகின்றேன். இதில் "பெடியள்" என விழிக்கப்பட்டவர்கள் தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் ஆவர். குறித்த இந்த வார்த்தையானது பல ஆத்மார்த்தமான உணர்வுகளை தன்னகத்தே கொண்டிருந்தது. அன்பு, மரியாதை, கௌரவம், செல்லம், நம்பிக்கை போன்ற பல உணர்வுகளின் ஒட்டுமொத்த வடிவமாகவே இந்த சொல் தமிழ் மக்களால் குறிப்பாக விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் பயன்படுத்தப்பட்டது என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.



ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் ஆண் போராளிகளுக்கு (பெடியங்கள் / பொடியங்கள்) இந்த சொல் பயன்படுத்தப்பட்டாலும் பின்னர் பெண் போராளிகளையும் சேர்த்தே இது பயன்பாட்டில் இருந்தது. பெண் போராளிகள் மேற்கூறிய சொல்லின் பெண்பால் பொருள்கொண்டு அழைக்கப்பட்டமையானது மிகவும் அரிதாகவே காணப்பட்டது.

எனவே ஒரு கட்டத்தில் "பெடியள்" என்ற வார்த்தையானது பொதுவில் விடுதலைப் புலி உறுப்பினர்களை அடையாளப்படுத்தவே உபயோகப்படுத்தப்பட்டது. மேலும் "பெடியள் விடாயினம்" என்ற சொல்லானது பல்வேறு அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டது. பொதுவாக இலங்கை இராணுவத்துடன் மோதல்கள் இடம்பெறும்போது சிலவேளைகளில் தற்காலிக இராணுவ பின்னடைவுகளை விடுதலைப் புலிகள் சந்திக்கின்றபோது தம்மைத் தாமே ஆறுதல்படுத்திக் கொள்ளவும், விடுதலைப் புலிகள் ஒருபோதும் தமது இறுதி இலக்கான தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதை மறைமுகமாக சொல்லவும் இந்த சொற்றொடர் அதிகமாக வழக்கிலிருந்தது. மேலும் விடுதலைப் புலிகள் போராட்டத்தை ஒரு போதும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்; அவர்களை தோற்கடிக்க முடியாது என்ற அர்த்தத்திலும் இந்த வசனம் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது.



எனினும் யாருமே எதிர்பார்த்திராத விதத்தில் "முள்ளிவாய்க்கால் முடிவுகள்" சோகத்தில் முற்றுப்பெற்றபோது, நிலைமை தலைகீழாக மாற்றமுறத் தொடங்கியது. யுத்த முடிவில் பல ஆயிரக் கணக்கான போராளிகள் ஒன்றில் கைது செய்யப்பட்டார்கள் அல்லது இராணுவத்திடம் சரணடைந்தார்கள். இந்த நிகழ்வோடு "பெடியள் விடாயினம்" என்ற சொல்லும் பயன்பாட்டினின்றும் வழக்கொழியத் தொடங்கியது. மாபெரும் அதிர்ச்சியை "தமிழ் ஈழ" ஆதரவாளர்களுக்கு ஏற்படுத்திய "முள்ளிவாய்க்கால் முடிவுகள்" "பெடியள்" தொடர்பான அவர்களின் அபிப்பிராயத்தை மட்டுமின்றி, அவர்களை நோக்கிய செயற்பாடுகளையும் மாற்றியமைத்தமையானது மிகவும் வியப்பிற்குரிய துயர்மிகு நிதர்சனமாகும்.

உலக நாடுகளில் பொதுவாக இவ்வாறான உள்நாட்டு மோதல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இயல்பாக எழுகின்ற பிரதான ஒரு பிரச்சினைதான் போராட்டத்தில் ஈடுபட்ட முன்னைநாள் போராளிகளை மீண்டும் அவர்களின் வாழ்விட சமூகங்களுடன் இணைத்து ஓர் இயல்பு நிலை வாழ்க்கை முறையினை மீளக் கட்டியெழுப்புவது ஆகும். அதாவது அவர்களை சமூகத்தில் மீளொருங்கிணைத்துக் கொள்வதாகும். ஒரு உயர்ந்த அல்லது அவர்களது பார்வையில் மகத்தான இலட்சியத்துடன் தமது இலக்கினை நோக்கி ஆயுதம் ஏந்தி போராடிய இவர்களை எப்போதும் இவர்கள் சார்ந்த மற்றும் சாராத சமூகங்கள் உடனடியாகவே தம்முள் உள்வாங்கிக் கொள்வதில்லை. எவ்வளவு தான் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு இவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் இந்த போராளிகள் தொடர்பான அச்சம் அத்துடன், இவர்கள் கடந்த காலங்களில் கொண்டிருந்த ஆயுத அரசியல் மற்றும் இராணுவ வகிபங்குகள் என்பன சமூகத்தில் பலத்த சந்தேகத்தையும் பயத்தையும் கொடுக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. அதுவும் இலங்கை போன்றதொரு நாட்டில் இந்த முன்னைநாள் போராளிகள் அவர்களின் புனர்வாழ்வுக்குப் பிந்திய விடுதலையின் பின்னரும் இலங்கை இராணுவ உளவுப் பிரிவினரால் நிழல் போல தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இது போன்ற விடயங்களும் கூட அவர்கள் சார்ந்த சமூகத்தினர் மத்தியிலான இவர்கள் குறித்த பார்வையை பெரும் அச்சுறுத்தலுடன் கூடிய ஒன்றாகவே விஸ்தரித்துள்ளது.


**கலாநிதி**
**எம். எஸ். அனீஸ்**
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
கொழும்புபல்கலைக்கழகம்)




இராணுவ மற்றும் உளவுப்பிரிவு கண்காணிப்பு நடவடிக்கைகள் தம்மகத்தே பல நியாயப்பாடுகளைக் கொண்டிருந்தாலும் குறித்த சமூகத்தின் இந்த போராளிகள் தொடர்பான எண்ணப்பாட்டினை நேர்நோக்குக் கொண்டதாக அமைக்கவில்லை. இவ்வாறு அரசினால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள பல ஆயிரக்கணக்கான முன்னைநாள் விடுதலைப்புலி உறுப்பினர்களில் வடக்கை சேர்ந்த தமிழ் போராளிகளுக்கும் இந்த நிலையே ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் சமூகத்தின் விடிவெள்ளிகளாக பார்க்கப்பட்டும் போற்றப்பட்டும் இருந்த இந்த போராளிகள் இன்று நம்பிக்கை தளம்பிய ஒரு கையறுநிலையில் அநாதரவாக வீதிகளிலே விடப்பட்டுள்ளனர். "விடுதலைப் போராளிகள்", "வீரவேங்கைகள்" மற்றும் "இனத்தின் விடுதலை வீரர்கள்" என்றெல்லாம் போற்றிப்புகழப்பட்ட இவர்களை இன்று ஏறெடுத்துப் பார்க்கவும் யாருமில்லாத நிலை தோன்றியுள்ளது.

குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அயலவர்கள் என்று எல்லோராலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இன்று இவர்களில் பலருடைய காலம் கழிந்து செல்கிறது. ஒரு காலத்தில் ஊர்ச் சந்திகளிலே ஏ கே 47 ரக ஆயுதங்களை தமது தோள்களிலே மிடுக்காக சுமந்து கொண்டு உலாவரும் இவர்களுடன் நின்று பேசுவதையே ஒரு

> **விடுதலைப் புலிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது இந்த கடல் கடந்த சமூகம் அந்த போராட்டத்திற்கு காட்டிய அக்கறை மற்றும் ஆதரவு என்பவற்றில் ஒரு சிறிய விகிதமேனும் இந்த புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் விடயத்தில் காட்டப்படுமாயின் ஒரு பாரிய மாற்றத்தை விரைவிலேயே எட்டமுடியும்**

பாக்கியமாகவும் சமூக கௌரவமாகவும் கருதிய பலர், இன்று இவர்களைக் கண்டாலேயே சொல்லாமல் கொள்ளாமல் நழுவிச் செல்லும் நிலையே காணப்படுகிறது.

கட்டிளம் பருவத்தினரான இந்த இளைஞர், யுவதிகளுக்கு போதிய தகுதிகள் இருந்தும் தொழில் வாய்ப்புகளை வழங்க அநேகர் முன்வருவதில்லை. மறுபுறமாக, இவர்களில் திருமண வயதை எட்டிய நிலையிலுள்ளோரை அந்த பந்தத்தினூடாக தமது குடும்பங்களில் இணைத்துக் கொள்ளவும் அநேகமானோர் விரும்புவதில்லை. எனவே, உரிய வயதில் தொழில் மற்றும் திருமணம் இன்றிய நிலையில் அவர்கள் சார்ந்த சமூகத்தில் இவர்களுக்குரிய அந்தஸ்து அளவீடு என்ன என்பதை ஊகிப்பது கடினமல்ல. ஒருபுறமாக தமது உயிரிலும் மேலாக மதித்த போராட்டம் தோல்வியடைந்த விரக்தி, மறுபுறமாக எந்த சமூகத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி போராடினார்களோ அதே சமூகமே தம்மை ஓரங்கட்டும் நிலை என்ற இரட்டைப் பாதிப்பு அவர்களை விரக்தியின் விளிம்பிற்கே இட்டுச்செல்லும் என்பது இயல்பான யதார்த்தமே. இந்த மன விரக்தியே இன்று வடக்கில் பல ஆயிரக்கணக்கான முன்னைநாள் போராளிகளின் நிலை. தமது இந்த அளவிட முடியாத தாக்கத்தினையும் மன இறுக்கத்தினையும் யாரிடம் முறையிடுவது என்று தெரியாமலும், யாரிடம் இதற்கான தீர்வினைக் கோருவது என்பதை அறியாமலும் அச்சொட்டாகப் பொருந்தக்கூடியதும் அவசியம் வேண்டப்படுவதும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. இந்த

(11ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகைச் சுற்றியதில்

# மலேசியத் தேர்தல்: ஆளும் கூட்டணி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது

மலேசியாவில் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் ஆளும் பாரிசான் தேசிய கூட்டணி மீண்டும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டது.




பொதுத் தேர்தலில் மொத்தம் 80 சதவீத வாக்குகள் பதிவாகின. காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப் பதிவு நடைபெற்றது. 1.3 கோடி வாக்காளர்களில் 1 கோடிக்கும் அதிகமானோர் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர்.

பிரதமர் நஜீப் ரசாக் தலைமையிலான தேசிய முன்னணி கூட்டணிக்கும், எதிர்க்கட்சி கூட்டணியான மக்கள் கூட்டணிக்கும் இடையே முக்கியப் போட்டி நிலவியது.

மொத்தமுள்ள 222 இடங்களில் ஆளும் கூட்டணி 112 இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை கைப்பற்றியது.

தேர்தல் ஆணையத் தலைவர் டேன் ஸ்ரா அப்துல் அஜீஸ் மொஹமத் யூசுப் தேர்தல் முடிவை அறிவித்தார். பிரதமர் நஜீப் ரசாக் பேகான் தொகுதியில் இருந்து வெற்றி பெற்றார்.

எதிர்க்கட்சியான மக்கள் கூட்டணி தோல்வியை ஒப்புக் கொள்ள மறுத்து விட்டது.

கடந்த 2008-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஆளும் கூட்டணி 140 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. தற்போது வெறும் 112 இடங்களிலேயே வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சித் தலைவரான அன்வர் இப்ராஹிம், அவரது மகள் நுருல்லிசா அன்வர் ஆகியோரும் வெற்றி பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

மலேசியாவிலேயே பொருளாதார ராதியில் முக்கிய மாநிலமான பினாங்கையும் எதிர்க்கட்சிக் கூட்டணி தக்க வைத்துக் கொண்டது.

ஆளும் தேசிய கூட்டணி தொடர்ந்து 56 ஆண்டுகளாக மலேசியாவில் ஆட்சியில் உள்ளது குறிப்பிடத்தக்கது. எனினும் இந்த முறை தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டணியால் கடும் நெருக்கடி ஏற்பட்டது. அவற்றை எல்லாம் எதிர்கொண்டு தேசிய முன்னணி மீண்டும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சிக் கூட்டணித் தலைவர் அன்வர் இப்ராஹிம் இன்னும் இந்த தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு தனது ஆதரவாளர்களிடம் அன்வர் இப்ராஹிம் அழைப்பு விடுத்துள்ளார். பல்வேறு தேர்தல் முறைகேடுகளுக்கு நாட்டின் தேர்தல் ஆணையம் உடந்தையாக இருந்தது என்று அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

# துருக்கியிலிருந்துவெளியேறும் குர்து இன போராளிகள்!

குர்து இன பிரிவினைவாத இயக்கமான பிகேகே அமைப்பின் உறுப்பினர்கள் தாம் உடன்பட்டது போல துருக்கியில் இருந்து வெளியேறத் தொடங்கியிருப்பதாக குர்துக் கட்சி தலைவர்கள் கூறியுள்ளனர்.



ஆயிரக்கணக்கானோர் பலியாகக் காரணமான மூன்று தசாப்தகால மோதலுக்கு ஒரு முடிவை நோக்கியதாக இந்த நகர்வு பார்க்கப்படுகிறது.

தடை செய்யப்பட்ட இந்த இயக்கத்தின் 1500 அல்லது அதற்கும் அதிகமான போராளிகள் கால்நடையாக வடக்கு இராக்கில் உள்ள தமது தளங்களுக்கு செல்கிறார்கள். மூன்று அல்லது நான்கு மாதங்களில் இந்த முழுமையான பின்வாங்கல் முற்றுப்பெறும்.

ரகசியமாக நடந்த பேச்சுவார்த்தைகளை அடுத்து உருவான ஒரு சரித்திர முக்கியத்துவம் மிக்க போர்நிறுத்தத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் சிறையில் இருக்கும் பிகேகே தலைவரான அப்துல்லாஹ் ஒகலன் அவர்கள் இந்தப் பின்வாங்கலை செய்யுமாறு மார்ச் மாதத்தில் கேட்டிருந்தார்.

பின்வாங்கிச் செல்லும் போராளிகளுக்கு எந்தவிதமான தீங்கும் செய்யப்படாது என்று கூறிய துருக்கிய பிரதமர் ரெசப் தைப் எர்தோவன் அவர்கள், போராளிகள் தமது ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

இந்தியச் செய்திகள்

# கர்நாடகா:காங்கிரஸ் பெருவெற்றி! முதல்வராக சித்தராமைய்யா தேர்வு

கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியை கைப்பற்றியுள்ளது.



உட்கட்சிப் பூசல் மற்றும் ஊழல் புகார்களில் சிக்கித் தவிக்கும் பாரதீய ஜனதா கட்சி ஆட்சியை இழந்துள்ளது.

தென் இந்தியாவில் முதல் முறையாக ஒரு மாநிலத்தில் ஆட்சியை கைப்பற்றிய பாரதீய ஜனதா கட்சி கடந்த முறை பெற்ற இடங்களில் பாதியளவைக் கூட இம்முறை வெல்லவில்லை என்பது குறிப்பிடத் தகுந்தது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் தேவ கவுடா தலைமையிலான மதச்சார்பற்ற ஜனதா தளமும் குறிப்பிடத்தகுந்த வெற்றிகளைப் பெற்றுள்ளது.

இந்த தேர்தல் தோல்வி தமக்கு ஒரு பெரிய அடி என்று பாரதீய ஜனதா கட்சியின் பேச்சாளர் ராஜீவ் பிரதாப் ரூடி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். கட்சியின் தலைவராக அண்மையில் மீண்டும் ஒரு முறை பொறுப்பேற்றுக் கொண்டுள்ள ராஜ்நாத் சிங் அவர்களின் தலைமைக்கு இது ஒரு பெரிய சவால் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கர்நாடகத் தேர்தலில் மாநிலப் பிரச்சினைகள், உள்ளூர் பிரச்சினைகள் மையமாக இருந்தது என்பதால் இந்தத் தோல்வி தேசிய அளவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தாது எனவும் பா ஜ க கூறுகிறது.

இதே வேளை காங்கிரஸ் கட்சியில் உற்சாகம் மேலோங்கியுள்ளது.

கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரங்களை முன்னின்று நடத்திய கட்சியின் பொதுச் செயலர்களில் ஒருவரும், ராகுல் காந்தியின் ஆலோசகர் என்று கருதப்படுபவருமான மதுவதன் மிஸ்த்ரி கர்நாடக மக்களின் கௌரவம் இந்தத் தேர்தல் மூலம் மீண்டும் பெறப்பட்டுள்ளது என்று கூறுகிறார்.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக முடங்கிப் போயிருந்த நிர்வாகம் மற்றும் ஊழல்களின் காரணமாக வெறுப்படைந்திருந்த மக்கள் ஒரு மாற்றத்துக்காகவே தமக்கு வாக்களித்தனர் எனவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கர்நாடகாவின் அடுத்த முதல்வராக சித்தராமைய்யா தேர்வு செய்யப்பட்டார்.

கர்நாடகாவில் கடந்த வாரம் நடைபெற்ற காங்கிரஸ் எம்எல்ஏக்களின் கூட்டத்தில், காங்கிரஸ் மூத்த தலைவர் சித்தராமைய்யா ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கர்நாடக சட்டப்பேரவைக்கு நடந்து முடிந்த தேர்தலில் காங்கிரஸ் கட்டிச 120 தொகுதிகளைக் கைப்பற்றி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது.

இந்த நிலையில், காங்கிரஸ் அரசின் முதல்வர் பதவிக்கான நபரை தேர்வு செய்வதற்காக பெங்களூருவில் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் மற்றும் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் இறுதியில், கர்நாடக மாநிலத்தின் அடுத்த முதல்வராக சித்தராமைய்யா தேர்வு செய்யப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கூடங்குளம் அணுமின்நிலையம் இயங்க உச்சநீதிமன்றம் அனுமதி

கூடங்குளம் அணுமின் நிலையம் இயங்க அனுமதி அளித்து நீதிபதிகள் கே.எஸ். ராதாகிருஷ்ணன், தீபக்குமார் ஆகியோர் அடங்கிய இந்திய உச்சநீதிமன்ற அமர்வு கடந்த வாரம் தனது தீர்ப்பினை வழங்கியது.

மின் உற்பத்தியாகும் அணு உலை தொடர்பான பாதுகாப்பு குறித்து ஆராயவென அமைக்கப்பட்ட அனைத்து நிபுணர் குழுக்களும், அணு உலையின் பாதுகாப்பு குறித்து திருப்தி தெரிவித்திருப்பதையும், உலை பாதுகாப்பாக செயல்படத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறியிருப்பதை சுட்டிக்காட்டிய நீதிபதிகள், இந்தியாவின் அணுசக்திக் கொள்கையை தாம் மதிப்பதாகவும் தெரிவித்தனர்.

மேலும், எரிசக்தித் தேவைக்காக அணு உலையில் பயன்படுத்தப்பட்ட எரிபொருளை பாதுகாப்பாக சேமிக்கும் முறையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தினர்.

பூவுலகின் நண்பர்கள் உள்ளிட்ட அணு உலை எதிர்ப்பாளர்கள் தொடர்ந்த இவ்வழக்கில் கடந்த ஆண்டு டிசம்பர் 6-ஆம் நாள் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

கூடங்குளத்தில் ரஷிய நாட்டு உதவியுடன் அணு மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் வாய்ந்த முதலாவது அணு உலையை இந்திய-ரஷ்ய நாடுகளின் அணுசக்திக் அமைப்புகள் கூட்டாகச் செயல்படுத்தி வருகின்றன.முதலாவது அணு உலை செயல்படத் தொடங்கிய ஆறாவது மாதத்தில் இரண்டாவது அணு உலை செயல்படும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

’கூடங்குளம் அணுமின் நிலையத்தில், குறிப்பிட்ட சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என, நிபுணர் குழு பரிந்துரைத்தது.ஆனால், அப்பாதுகாப்பு நடவடிக்கைகளை அமல்படுத்தாமலேயே, மின் உற்பத்தியை துவக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அணுக்கழிவுகளை எங்கு கொட்டுவது, இந்த பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்புக்கும், சுற்றுச்சூழலுக்கும் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என்பது பற்றிய விவரங்கள் தெளிவு படுத்தப்படவில்லை. எனவே, கூடங்குளம் அணுமின் நிலையம் செயல்படுவதற்கு தடை விதிக்க வேண்டும்.’ என தங்கள் மேல்முறையீட்டு மனுவில் மனுதாரர்கள் கோரியிருந்தனர்.

ஆனால் நிபுணர் குழுக்கள் ஒருமித்து அணுமின் நிலையம் பாதுகாப்பானது எனக் கூறியிருப்பதால் மின் உற்பத்தி துவங்குமென நீதிபதிகள் தெரிவித்திருக்கின்றனர் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாத் சாலி விடுதலை: ஜனாதிபதி நடவடிக்கை!

தமிழ் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் தலைவர் அசாத் சாலியை புலனாய்வுப் பிரிவினர் கடந்த வாரம் விடுதலை செய்துள்ளனர்.

அசாத் சாலி தற்போது தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய வகையிலான கருத்துக்களை வெளியிட்டதாகத் தெரிவித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அசாத் சாலி கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த மூன்றாம் திகதி அசாத் சாலியை புலனாய்வுப் பிரிவினர் கொலன்னாவை பிரதேசத்தில் வைத்து கைது செய்திருந்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவிற்கு அமைவாகவே அசாத் சாலி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அசாத் சாலியை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் அடிப்படையில் மூன்று மாத காலம் தடுத்து வைத்து விசாரணை செய்ய புலானய்வுப் பிரிவினர் நீதிமன்றின் அனுமதியைப் பெற்றுக் கொண்டிருந்தனர். இதன் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜூனியர் விகடன் தவறாக செய்தி வெளியிட்டது- சாலி

ஆயுதம் ஏந்தும் அமைப்புக்கு உதவியளிக்கப் போவதாக தாம் ஒருபோதும் கூறவில்லை என கொழும்பு மாநகர முன்னாள் பிரதிமேயர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழகத்தில் இருந்து வெளியாகும் ஜூனியர் விகடன் சஞ்சிகை தம்மை பிழையாக, தமது செய்தியில் கோடிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலையாவதற்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு அனுப்பிய சத்தியக்கடதாசியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தாம் கூறியதாக ஜூனியர் விகடன் வெளியிட்ட செய்தி பிழையானது. இதற்கு மறுப்பு தெரிவிக்க தாம் அந்த சஞ்சிகையிடம் கோரிக்கை விடுத்ததாகவும் அசாத் சாலி தெரிவித்துள்ளார்

ஒரு முஸ்லிம் என்ற வகையில், இலங்கையில் ஆயுதம் ஏந்தும் எவருக்கும் ஆதரவளிப்பதாக தாம் ஆலோசனை வழங்கப் போவதில்லை என்று சாலி சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் இறையாண்மைக்கு ஒருபோதும் ஊறு விளைவிக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிடடுள்ளார்.

இந்தநிலையில், தமது கருத்து என்று கூறப்பட்டு வெளியான செய்தியால் எவருக்கும் அசௌகரியம் ஏற்பட்டிருந்தால் அதற்கு கவலை தெரிவிப்பதாகவும் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

---

**தமிழ் மக்களுக்கான .....** .(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது விரிவான விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தீர்மானிக்கப்ப ட்டிருக்கின்றது.

ஜூன் மாதம் நடைபெறும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் தீர்வுத் திட்டம் தொடர்பிலான ஆலோசனை வரைபு தொடர்பிலான இணக்கத்தின் அடிப்படையிலேயே தொடர்ந்தும் இணைந்து செயற்படுவதா அல்லது தனித்துச் செயற்படுவதா என்பது தொடர்பில் முடிவு செய்யப்படும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, 'தேசிய பொதுச் சபை' ஒன்றை அமைப்பது தொடர்பிலும் அதனூடாக மக்களுக்கான இணைந்த வேலைத்திட்டங்களை முன்வைக்கமுடியும் என்றும் ஆலோசனை ஒன்று சிவில் சமூகத்தால் முன்வைக்கப்பட்டு அதற்காக உறுப்பினர்களை நியமிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன் போது உடனடியாக அதற்கான உறுப்பினர்களை நியமிக்கமுடியாது என்றும் அது தொடர்பில் பலருடன் ஆலோசனை நடத்த வேண்டியுள்ளதாகவும் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் மறுப்புத் தெரிவித்ததாக நிகழ்வில் கலந்து கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பிலும் பதின் மூன்றாவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ள குறைபாடுகள் உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பிய போது இரா.சம்பந்தன் பதிலளிக்க முடியாது திக்குமுக்காடிப் போயிருந்ததாகவும் உரிய வகையில் பதிலளிக்கமுடியாமல் மழுப்பல் பதில்களை வழங்கியதாகவும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

---

**இலங்கையில் துக்ளக்....** (7ம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தன்மையைத்தான், நாங்கள் இலங்கை அரசிடமும் எதிர்பார்க்கிறோம். புலிகள் போகட்டும். இங்கிருக்கும் தமிழர்களுக்குச் சம உரிமை கொடுக்கட்டும்" என்று முடித்தார் வீ.ஆனந்த சங்கரி.

அவரைச் சந்தித்து விட்டு வெளியே வந்த நாங்கள், ஒரு உணவு விடுதியில் உணவருந்தினோம். அப்போது அங்கிருந்த ஒருவர், "இலங்கை ராணுவத்தில் தற்போது இந்தப் பகுதி தமிழ்ப் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். 102 தமிழ் இளம்பெண்கள் அப்படி ராணுவத்தில் இணைந்துள்ளனர். அதில் விசேஷம் என்னவென்றால், அதில் ஒரு சிலர் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள். கிளிநொச்சி பெண்கள் பிரிவு ராணுவ முகாமுக்குப் போனால், அவர்களில் பலரைச் சந்திக்கலாம்" என்று எங்களுக்குத் தகவல் தந்தார். இதையடுத்து ராணுவ முகாமில் அப்பெண்களைச் சந்திப்பதற்கு அனுமதி பெற முயற்சி செய்தோம். எங்கள் முயற்சி பலித்தது.

'தமிழகத்தில் இலங்கை ராணுவத்தைத் தமிழர்கள் னற்றிக் கொண்டிருக்கும் வேளையில், அதே ராணுவத்தில் புதிய தமிழ்ப் பெண்களா? அதிலும் அவர்களில் சிலர் முன்னாள் பெண் புலிகளா?' அதிர்ச்சி மற்றும் ஆச்சரியத்துடன் அந்த முகாமுக்கு விரைந்தோம்.

(தொடரும்)

**நன்றி -துக்ளக்**

---

**நிலக்கண்ணிகளை....** (12ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் இளவரசர் ஹரி உரையாற்றியுள்ளார்.

இலங்கை, மொசாம்பிக், கொசோவோ, சோமாலியா, ஜோர்ஜியா, ஆர்மானியா போன்ற நாடுகளில் நிலக்கண்ணி வெடிகளை இன்னும் ஐந்தாண்டு காலப் பகுதியில் இல்லாதொழிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

**வடக்கு** .....(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் 1983 மே முதலாம் திகதிக்கும் 2009 மே 18ஆம் திகதிக்கும் இடையில் இடம்பெயர்ந்த 15,000 பொதுமக்கள் வடக்கில் தம்மை வாக்காளராகப் பதிவு செய்ய வழி பிறக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

---

**கூட்டமைப்பு** .....(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும் மன்னார் ஆயர் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பையடுத்து, வடமாகாணத்தின் பல மாவட்டங்களையும் சேர்ந்த சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில், தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளை என்ன வகையில் எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்வது என்பது பற்றிய நீண்ட கலந்துரையாடலும் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**இலங்கை....** (1ம் பக்கத் தொடர்ச்சி)

மகாராணியின் இந்தத் தீர்மானத்துக்கு பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் மதிப்பளிக்கின்றன. பொதுநலவாய அமைப்பின் தலைவர் என்ற வகையில் இந்த அமைப்புக்கு மகாராணி தொடர்ந்து வழங்கிவரும் அர்ப்பணிப்புடனான ஒத்துழைப்புக்கு நாம் மதிப்பளிப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுநலவாய அமைப்பின் தலைவர் என்ற ராதியில் தனது பிரதிநிதியான இளவரசர் சார்ள்சை, பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக்கு அனுப்பியதன் மூலம் மகாராணியின் ஒத்துழைப்பு தொடர்ந்துள்ளது.

பொதுநலவாய அமைப்புக்கும், இளவரசர் சார்ள்சுக்குமிடையில் பல வருடங்களாக நெருக்கமான தொடர்புகள் உள்ளன. பொதுநலவாய அமைப்பின் செயற்பாடுகளுக்கு அவர் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்.

2007ம் ஆண்டு உகண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிலும் இளவரசர் சார்ள்ஸ், மகாராணியை பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்து கொண்டிருந்தார்.

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு நன்கு அறியப்பட்டவரான இளவரசர் சார்ள்ஸ் கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், அவரை வரவேற்பதாகவும் பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா விடுத்திருக்கும் அறிக்கையில் மேலும் குறிப்பட்டுள்ளது.

---

**முஸ்லிம்களை..** (12ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது. வடக்கிலிருந்து முஸ்லிம் சகோதரர்கள் இரவோடு இரவாக வெளியேற்றப்பட்டதை எவரும் நியாயப்படுத்த முடியாது. இந்த கசப்பான உண்மை. நாங்களும் இன சுத்திகரிப்பிற்கு குற்றவாளிகள் என்பதை ஏற்றுக்கொள்ளும் வரைக்கும் எமக்கெதிராக இடம்பெறுகின்ற அடக்குமுறைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளாது.' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

---

**பெடியள்..** (9ம் பக்கத் தொடர்ச்சி)

வகையில், இலங்கையைப் பொறுத்த வரையில், இந்நடவடிக்கை முறைமையில் சம்பந்தப்பட்டவர்களாக முன்னைநாள் போராளிகள், அவர்கள் சம்பந்தப்பட்ட சமூகம், மற்றும் அரசாங்கம் என்பன காணப்படுகின்றன. இதில் பிரதான கருப்பொருளாக அமையும் முன்னைநாள் போராளிகள் தொடர்பில் குறித்த அவர்களின் மீள் வருகை, சுபீட்ஷத்தை நோக்கிய, அச்சுறுத்தலுக்கு இடமில்லாத எதிர்கால நடவ டிக்கைகளைக் கட்டியம் கூறி நிற்பதான உறுதியான நம்பிக்கையை அவர்களின் சமூகத்திற்கும் நாட்டின் அரசாங்கத்திற்கும் உத்தர வாதப்படுத்தும் வகையில் கட்டியெழு ப்பப்பட வேண்டும். இதனை செயற்பா ட்டினுள் உள்வாங்கவேண்டிய கடப்பாடும் தார்மீக அக்கறையும் அவர்கள் சார்பான சமூகம் மற்றும் அரசாங்கத்திடம் தாரா ளமாக எதிர்பார்க்கப்படும் ஒன்று. அதுதான் ஒரு வளமான நாட்டை கட்டியெழுப்ப உதவக்கூடிய உளப்பூர்வமான தூரநோக்குடன்கூடிய முன்னெடுப்பாக இருக்கமுடியும் என்பதுதான் என்னைப் போன்றோரின் வலுவான எதிர்பார்ப்பு.

அதேசமயம், குறித்த இந்த போராளிகள் தாம் அரசாங்க நிகழ்ச்சி நிரலின் கீழ் உள்வாங்கிய புனர்வாழ்வினை அர்த்த புஷ்டியுடன் தமது பலம்மிக்க எதிர்காலத்தில் பயன்படுத்தி தமது தாய் நாட்டிற்கும், தாம் சார்ந்த சமூகத்திற்கும் நம்பிக்கைக்குரியவர்களாக வாழ்ந்துகாட்ட வேண்டும். அவர்களைக் கண்டு மற்றவர்கள் அச்சப்படும் அல்லது சந்தேகப்படும் நிலை அவர்களாலேயே மாற்றத்திற்கு உள்ளாக்கப்படல் வேண்டும். இது இயல்பு வாழ்க்கையை சகஜ நிலையில் எதிர்கொள்ள இந்த போராளிகள் பக்கத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் திடகாத்திரமான முன்னெடுப்பு. இந்த பிரச்சினைக்கான தீர்வு ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல் அரசாங்கம், சமூகம், மற்றும் முன்னாள் போராளிகள் என்ற முத்தரப்பினரின் முழுமையான, திருப்திகரமான, ஆத்மார்த்தமான செயற்பாடுகளினூடு எட்டப்பட்டு வெற்றி காணப் பட வேண்டும். இதற்கான ஒத்துழைப்புகள் குறித்த சமூகம் சார்ந்த கடல் கடந்து வாழும் புலம்பெயர் சமூகத்திடமிருந்தும் தயக்கமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது இந்த கடல் கடந்த சமூகம் அந்த போராட்டத்திற்கு காட்டிய அக்கறை மற்றும் ஆதரவு என்பவற்றில் ஒரு சிறிய விகிதமேனும் இந்த புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் விடயத்தில் காட்டப்படுமாயின் ஒரு பாரிய மாற்றத்தை விரைவிலேயே எட்டமுடியும். இது தொடர்பான பன்முக கருத்துப்பரிமாறல்கள் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு வித்தி டலாம். எதையெதைல்லாமோ பேசியும் எழுதியும் வரும் நாம் இந்த விடயத்தையும் நமது கருப்பொருளாக (இனியேனும் கொஞ்சமாவது) காண்போமா?

பொதுவாக "காண்பதிலுள்ள காணாததை காண்போம்" என்பார்கள் ஆனால் இந்த விடயத்தில் சற்று மாற்றமாக "காண 'பதிலுள்ள காண்பதையாவது காண்போம்" என்பதுதான் சாலப் பொருத்தமானதாக இருக்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
ELUKATHIR

## அரசிலிருந்து மு.கா. விலகாது! பாராளுமன்றில் ஹக்கீம் அறிவிப்பு!!

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திலிருந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விலகாது என்று மு.கா தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.தன்னுடைய கட்சி அரசாங்கத்துடன் கருத்து வேறுபாடுகளை கொண்டுள்ள போது. அவ்வாறான விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்த்துக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.நாடாளுமன்றத்தில் அமைச்சர் டிலான் பெரேரா மீதான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# தெரிவுக்குழுவில் ஐதேக நிபந்தனையை மாற்றியது!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வந்தால் தான், தாமும் அதில் இடம்பெறுவோம் என்று கூறி வந்த ஐதேக தற்போது புதிய நிபந்தனையை விதித்துள்ளது.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சிறிலங்கா அரசினால் முன்மொழியப்பட்டுள்ள தெரிவுக்குழுவில் ஐதேக இணைந்து கொள்ள வேண்டும் என்று சிறிலங்கா அரசதரப்பில் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அரசியலமைப்பின் 17வது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சுதந்திர ஆணைக்குழுக்களை நியமிக்க சிறிலங்கா அரசாங்கம் தயாரானால், தாம் தெரிவுக் குழுவில் இணைந்து கொள்ளத் தயார் என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வராது போனாலும், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவும் வகையில், ஐதேக அதில் பங்கேற்கும். ஆனால், சுதந்திர ஆணைக்குழுக்களை நியமிக்கும் என்பதை சிறிலங்கா அரசாங்கம் முதலில் தெளிவுபடுத்த வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

## கூட்டமைப்பின் பதிவை வலியுறுத்தி உள்ளூராட்சி தலைவர்கள் கடிதம்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவை வலியுறுத்தி வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுமையிலுள்ள பத்து உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், மற்றும் உறுப்பினர்கள், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களுக்கு ஒருமித்த குரலில் தீர்மானக் கடிதங்களை அந்த அந்த மன்றங்களின் சார்பில் அனுப்பி வைத்துள்ளார்கள்.

வவுனியா நகர சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச சபை ஆகியவற்றின் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஆளும் கட்சி தலைவர்கள், உறுப்பினர்கள் இவ்வாறு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்கள். இக்கடிதப் பிரதிகள் ஈ.பி.ஆர்,எல்.,எப் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் சித்தார்த்தன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் ஆனந்தசங்கரி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## ரஜனி, கமல்,விஜய் படங்கள் இனி இலங்கையில் இல்லை!

தமிழகத்தில் தயாரிக்கப்படும் ரஜினிகாந்த், கமலஹாசன், சரத்குமார், விஜய் ஆகிய தமிழ் நடிகர்கள் நடிக்கும் தமிழ் திரைப்படங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய வேண்டாம் என ராவணா சக்தி அமைப்பு இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அசோக சேரசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ராவணா சக்தி அமைப்பின் ஏற்பாட்டாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட அந்த அமைப்பின் உறுப்பினர்கள், திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவரை நேரில் சந்தித்து இந்த கோரிக்கை விடுத்துள்ளனர்.கலாசார அமைச்சின் அனுமதியின்றி, மேல் குறிப்பிட்டுள்ள தமிழ் நடிகர்கள் நடித்த திரைப்படங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யவோ, திரையிடவோ அனுமதி வழங்குவதில்லை என்ற உறுதிமொழி கடிதத்தை அசோக சேரசிங்க, இதன் போது, ராவணா சக்தி அமைப்பின் ஏற்பாட்டாளரிடம் கையளித்துள்ளார்.

## நிலக்கண்ணிகளை அகற்ற நிதி: இளவரசர் ஹரி கோரிக்கை!




இலங்கையில் நிலக்கண்ணி வெடிகளை அகற்ற போதியளவு நிதி ஒதுக்கீடு அவசியம் என பிரித்தானிய இளவரசர் ஹரி தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை இன்னும் ஐந்து ஆண்டுகளில் முழுமையாக அகழ முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். போதியளவு நிதி ஒதுக்கீடு இருந்தால் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிரித்தானிய இளவரசர் ஹரி தற்போது அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வொஷிங்டனில் உள்ள ஹலோ ட்ரஸ்ட்

(11ம் பக்கம் பார்க்க)

சுமந்திரன் கூறுகிறார்---

## முஸ்லிம்களை வெளியேற்றிய தவறை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்!



இலங்கையின் வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றி இன சுத்திகரிப்பு செய்தது தவறு என்பதை ஏற்றுக்கொள்ளும் பட்சத்திலேயே தமிழ்த் தரப்பு மற்றவர்களிடம் நியாயம் கோர முடியும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இலங்கை தமிழரசு கட்சியின் ஸ்தாபகரான தந்தை செல்வாவின் 36ஆவது நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை விசாரணை நடத்த வேண்டும் என்று தற்போது ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதில் கூறப்பட்டுள்ளது மனித உரிமை விடயத்திலே இருதரப்பினர்களும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கெதிராக குற்றம் புரிந்துள்ளார்கள். இது விசாரிக்க ப்பட வேண்டும் தண்டிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நாங்கள் ஆதரிக்கின்றோம். இருதரப்பினரையும் உட்படுத்தி இந்த விசாரணை இடம்பெற வேண்டும்.' என்று அவர் கூறினார்.

'சர்வதேச சட்டத்திலே மிகப் பாரிய குற்றமான இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது என்பதையும், இறுதிகட்ட யுத்தத்தின் போது வன்னிப் பகுதியிலே வாழ்ந்த மூன்று இலட்சம் மக்களுக்கெதிராக இலங்கை அரசாங்கம் துன்புறுத்தல் செய்தது என்பதையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. சர்வதேச சட்டங்களுக்கு முரணாக எங்களுடைய பூர்வீக நிலம் தற்போது சுவீகரிக் கப்படுகின்றன என்பதையும் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது.' என்றும் அவர் குறிப்பிட்டார்.

'அதேநேரம் எங்களுடைய தரப்பிலிருந்தும் தவறுகள் இடம்பெற்றுள்ளதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். எங்களுடைய மண்ணிலிருந்து இன சுத்திகரிப்பை நாங்கள் செய்திருக்கிறோம். தமிழர் தரப்பிலிருந்து இனச்சுத்திகரிப்பு

(11ம் பக்கம் பார்க்க)



PRINTED BY MULTI LINES ADVERTISING (PVT) LTD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org